# ஒளிந்தாலும் விடமாட்டேன்



## ராஜேஷ்குமார்

## 1

ஷவருக்குக் கீழே நின்றிருந்தாள் தாமினி.

சில்லிடும் தண்ணீர் பன்னீர்த் தூறலாய், உடம்பு பூராவும் பட்டு, வழிந்து ஓட, ஷூட்டிங் களைப்பு அந்தத் தண்ணீரோடு, உடலை விட்டுக் கழன்று செல்ல ஆரம்பித்தது.

நூற்றுக்கணக்கான படங்களில் நீங்கள் பார்த்து ரசித்த தாமினியின் விஸ்தாரமான கண்களையும், பனிச்சறுக்கு நாசியையும், ரோஜா நிற ஈறுகளையும், பளிங்கு மோவாயையும், நான் தனியாக வர்ணிக்க வேண்டிய அவசியமில்லை.

அவள் மறுக்க மறுக்க, திருச்சிக்குப் பக்கத்தில் சில ரசிகர்கள், அவளுக்காகக் கோயில் கட்டியிருக்கிறார்கள். ஷூட்டிங் இடைவேளையில் அவள் குடித்துவிட்டு மிச்சம் வைத்த கோக்கோ கோலா, பத்தாயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ஆக்ஷன் ஹீரோவுக்கு இணையாய்ச் சம்பளம் வாங்கும் தாமினியிடம் 'லட்சியம் என்ன?' என்று கேட்டால் 'ஆஸ்கார் அவார்டு' என்று பதில் வரும். அந்த லெவலுக்குக் கதையம்சத்தோடு, யாராவது படம் எடுக்கத் தயாராய் இருந்தால், அந்தப் படத்தில் இலவசமாகவே நடித்துக் கொடுக்க தான் தயார் என்று போன மாதம் அறிக்கை கொடுத்திருக்கிறாள்.

இன்னும் இரண்டு மூன்று பக்கங்களாவது அவளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போகலாம். குளியலறைக்கு வெளியே இருந்து டெலிபோன் சத்தம் குறுக்கிடுகிறது.

பெரிய டவலால் உடம்பைச் சுற்றிக் கொண்டு

மார்பிள் தரையில் பாதம் பாதமாய் ஈரம் பதிய - வெளியே சென்றாள் தாமினி.

ரத்த நிறத்தில் இன்ட்டர்காம் இன்னிசையாய்க் கதறிக் கொண்டிருந்தது.

ரிசீவரைக் கையிலெடுத்துக் கொண்டே - காதோரம் விழுந்திருந்த ஈரக் கேசத்தை ஒதுக்கினாள் தாமினி.

''ஹலோ...''

மறுபக்கமிருந்து பவ்யமும் பரபரப்பும் கலந்த மென்மையான ஆண் குரல் வந்தது.

''மேடம் நான் சத்தியமூர்த்தி பேசறேன்...''

அவளுடைய கால்ஷீட் விவகாரங்களைக் கவனித்துக் கொள்ளும் மேனேஜர் சத்தியமூர்த்தி.

''சொல்லுங்க...''

''மினிஸ்டர் திருச்சிற்றம்பலம் லைன்ல இருக்கார் மேடம்...''

சட்டென தாமினியிடமும் ஒரு பரபரப்பு பரவியது.

''என்ன விஷயம்... சத்தியமூர்த்தி...?''

''தெரியலை மேடம்... உங்ககிட்டே பேசணும்ன்னு சொன்னார்... வேற எதுவும் சொல்லலை...''

''சரி... கனெக்ஷன் குடுங்க...''

சத்தியமூர்த்தி மறுமுனையோடு, இணைப்பைக் கொடுக்க - தாமினி குரலை, ரிசீவரில் வெளியிட்டாள்.

''ஹலோ... தாமினி ஹியர்...''

''நான் கலை, கலாச்சாரத் துறை அமைச்சர் திருச்சிற்றம்பலம் பேசறேம்மா...''

''வணக்கம் சார்...''

''சௌக்கியமா இருக்கியாம்மா...?''

அவளிடம், முதன் முதலாய் டெலிபோனில்



பேசினாலும் ரொம்ப நாள் பழகியவர் போல நலம் விசாரித்தார்.

''ஆண்டவன் கருணையால நல்லா இருக்கேன் ஸார்...''

அவளும் சம்பிரதாயமாகவே பதில் சொன்னாள்.

''நான் போன் பண்ணினது உனக்கு சர்ப்ரைஸா இருக்கும்ன்னு நினைக்கறேன்...''

''ஆமா ஸார்...''

''உன்கிட்டே ஒரு முக்கியமான விஷயத்தைப் பத்திப் பேசணும்மா...''

''என் கிட்டேயா?''

''ஆமா...''

''என்ன ஸார் பேசணும்?''

''நேரில் பேசணும்ன்னு ஆசைப்படறேன்...''

''நாளைக்குக் காலைல ஒம்பது மணிக்கு, என் ஷெட்யூல் இருக்கு ஸார்... எட்டு மணிக்கு உங்களை வந்து பார்க்கட்டுமா?''

''எங்கே வந்து பார்ப்பே?''

''எங்கே வந்து பார்க்கணும்ன்னு நீங்களே சொல்லுங்க ஸார்...''

''ஜி.பி. ரோட்டிலிருக்கிற, என்னோட பங்களா ஆபிஸுக்கு வர்றியா?''

''வாறேன் ஸார்...''

''ஒரு சின்ன திருத்தம்மா...''

''என்ன ஸார்?''

''நாளைக்குக் காலைல வரைக்கும் விஷயத்தை தள்ளிப் போடணுமான்னு யோசிக்கறேன்... இப்ப வர முடியுமா?''.

''இ... இப்பவா?''

கேட்டுக் கொண்டே நிமிர்ந்து, தேக்கு மர கப்போர்டின் மேல் வைத்திருந்த டைட்டனின் டிசைனர் க்ளாக்கைப் பார்த்தாள்.

முட்கள் தத்திக் கொண்டே எட்டு ஐந்தைக் காட்டிக் கொண்டிருந்தன.

திருச்சிற்றம்பலமே வார்த்தைகளைத் தொடர்ந்தார்.

''என்னம்மா யோசிக்கறே...? மணி எட்டுதானே ஆகுது?''

''அது வந்து...''

''இப்ப வேற யாரோடவாச்சும் அப்பாயின்மென்ட் இருக்கா?''

''நோ... நோ...''

''அப்புறம் என்ன?''

''அநாவசியமான கிசுகிசுக்களையும். வதந்திகளையும் தவிர்க்கறதுக்காக நான் சாயந்தரம் ஆறு மணிக்கு மேல ஷூட்டிங் வெச்சுக்க ஒத்துக்கறதில்லை... அதே மாதிரி சாயந்தரம் யாரோடவும், எங்கேஜ்மென்ட்ஸும் ஃபிக்ஸ் பண்ணிக்கறதில்லை...''

ஓரிரு விநாடிகள் யோசனையாய் மவுனித்த திருச்சிற்றம்பலம் மெல்ல வார்த்தைகளைத் தொடர்ந்தார்.

''காலைல ஆறு மணியிலிருந்தே என்னைப் பார்க்க கட்சிக்காரங்க வர ஆரம்பிச்சிடுவாங்க... நாம பேச தொந்தரவா இருக்கும்... அதான் இப்போ போன் பண்ணினேன்... என்னை மாதிரி பெரிய மனுஷனுக்காக, உன்னோட கொள்கையைக் கொஞ்சம் தளர்த்திக்கக் கூடாதா?''

சொற்ப விநாடிகளுக்குப் பின் சொன்னாள்.

''ஓகே ஸார்... நான் இப்போ வர்றேன்...''

''ரொம்ப சந்தோஷம்மா... காரை அனுப்பட்டுமா?''

''வேண்டாம் ஸார்... என்னோட கார்லயே வர்றேன்...''

''ரிசீவரை வெச்சுடறேன்...''



மறுமுனை டொக்கென்று சாத்தப்பட - தாமினி டிரஸ்சிங் டேபிளின் முன்னால் அமர்ந்தாள்.

அவசரமாய் ஒரு எளிமையான மேக்கப்பை முகத்துக்குக் கொடுத்துக் கொண்டு, ஊதா நிற புடவைக்கு மாறினாள்.

படிகளில் இறங்கிக் கீழே வந்தாள்.

ப்ளைவுட் மேஜைக்குப் பின்னே தெரிந்த சத்தியமூர்த்தி எழுந்து நின்றான்.

''கார் சாவி குடுங்க சத்தியமூர்த்தி... மினிஸ்டர் உடனே என்னை வரச் சொன்னார்... என்கிட்டே ஏதோ பேசணுமாம்.''

கீ ஸ்டாண்டில் மாட்டியிருந்த சாவிக் கொத்தை உருவி, அவளிடம் நீட்டிக் கொண்டே, அவளை ஆச்சர்யமாய்ப் பார்த்தான்.

அவனுடைய ஆச்சர்யத்தைப் புரிந்து கொண்டவளாய் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''இந்த நேரத்தில் பொதுவா அப்பாயின்மென்ட் ஃபிக்ஸ் பண்ணிக்க மாட்டேன்... ஆனா இப்போ கிளம்பிப் போறேன்... அதானே யோசிக்கறிங்க...?''

''அ... ஆமா மேடம்...''

''மினிஸ்டர் வேண்டுகோள் வெச்சப்ப தட்ட முடியலை... காலைல அவருக்கு சௌகரியப்படாதாம்... இப்போ வரலைன்னு பிடிவாதமா மறுத்தா அநாவசியமா பிகு பண்ணிக்கற மாதிரி தெரியும்... அவரோட பதவிக்கு மரியாதை தரணும்... அதான் 'வர்றேன் ஸார்'ன்னு சொல்லிட்டேன்... நாளை, ஷெட்யூல் லிஸ்ட் எழுதி மேஜைல வெச்கிட்டு நீங்க போகலாம்...''

கார் சாவியை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு நடை பெயர்ந்தாள் தாமினி.

போர்டிகோ படிகளில் இறங்கிச் செல்லும்

தாமினியின் முதுகையே இமைக்காமல் பார்த்தான் சத்தியமூர்த்தி.

---

## 2

---

ஜி.பி. ரோட்டின் தென் கோடியில் இருந்தது அந்த பிரம்மாண்டமான பங்களா.

வாயில் கதவருகே காரை பிரேக் அடித்து நிறுத்தினாள் தாமினி.

ஹார்ன் இசைத்தாள்.

இரும்பு கதவின் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த செக்யூரிட்டி கிராதி கேட்டை விரித்தார்.

தாமினி ஆக்சிலேட்டரை மிதிக்க கார் பேவ்மென்ட்டில் வழுக்கிச் சென்று, போர்டிகோவில் போய் ஓய்ந்தது.

உள்ளே இருந்து ஒருவன் ஓடி வந்து காரின் கதவைத் திறந்து விட்டான்.

''வாங்கம்மா. அய்யா உள்ளே இருக்கார்...''

மங்கலான வெளிச்சத்துடன் இருந்த போர்டிகோவைக் கடந்து, விஸ்தாரமான ஹாலுக்குள் பிரவேசித்தாள்.

திருச்சிற்றம்பலம் எதிர்ப்பட்டார்.

கதர் வேஷ்டிக்கு மேலே வெற்றுடம்பாய் இருந்தார்.

கையில் வைத்திருந்த ஜிப்பா மாதிரியான சர்ட்டை உடம்புக்குக் கொடுத்துக் கொண்டே சொன்னார்.

''வெயில் காலம்... ஒரே புழுக்கம்...''

''ஏதோ முக்கியமான விஷயம் பேசணும்ன்னு சொன்னிங்களே ஸார்...?''

அவர் தலையாட்டினார்.

''ஆமா. முக்கியமான விஷயம்தான்... அப்படி



புல் வெளிலே, காத்தாட உக்காந்து பேசலாமே...?''

சொன்னவர், அந்த தாட்டியான ஆசாமியிடம் திரும்பினார்.

''தர்மா...''

''அய்யா...?''

''ஃப்ரிஜ்ஜிலிருந்து கூலா எதுனாச்சும் கொண்டு வா... நாங்க ரெண்டு பேரும், வெளில உக்காந்து பேசிட்டிருக்கோம்...''

''சரிங்கய்யா...''

அந்த தர்மா தன் மாமிச மலை உடம்பை அசைத்தபடி நகர்ந்து சென்றான்.

''வாம்மா... நாம அங்கே போய் உக்காரலாம்...''

போர்டிகோவுக்கு அப்பால் பரந்த லான் தெரிந்தது.

லானின் மையத்தில் ஒரு வண்ணக் குடையும், குடைக்குக் கீழே, கண்ணை உறுத்தாத மெர்க்குரி வெளிச்சமும் இருந்தது.

மூன்று சாய்வு நாற்காலிகளும், கண்ணாடி பதித்த டீபாயும், மெர்க்குரியின் இளநீல வெளிச்சத்தில் குளித்துக் கொண்டிருந்தன.

''உக்காரும்மா...''

அந்த நாற்காலிகளைக் காட்டினார் திருச்சிற்றம்பலம்.

இருக்கையை நிறைத்துக் கொண்டே அவள் கேட்டாள்.

''என்கிட்டே எதைப் பத்திப் பேசணும் ஸார்...?''

சாய்வு நாற்காலியில் சரிந்த திருச்சிற்றம்பலம் பாக்கெட்டிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்தார்.

''நான் சிகரெட் பிடிக்கறதில், உனக்கு ஆட்சேபணை எதுவுமில்லையே...?''

அவள் பதிலை எதிர்பார்க்காமல் லைட்டரால் சிகரெட் முனைக்கு உயிரூட்டினார்.

அடர் நீலத்தில் புகை நெளிந்து கொண்டே மேலேற - திருச்சிற்றம்பலம் தொடர்ந்தார்.

''நான் எதைப் பத்திப் பேசப் போறேன்னு உனக்கு ஏதாவது யூகம் இருக்கா தாமினி...?''

''தெரியலை ஸார்...''

''யோசிச்சுப் பாரு...''

பெரிய இமைகளை மூடி, சற்றே யோசித்தவள் அவரைக் கேட்டாள்.

''க்ளூ தாங்க ஸார்... நீங்க பேசப் போற விஷயம் பர்சனலா...? இல்லை அஃபிஷியலா...?''

''பர்சனல்ன்னா உன்னோட யூகம் என்னவா இருக்கும்... அஃபிஷியல்ன்னா என்னவா இருக்கும்...?''

''நீங்க ஏதாவது சொந்தப்படம் எடுக்கற அபிப்ராயத்தில் இருக்கிங்களா...? என்னோட கால்ஷீட் புக் பண்ணறதுக்காக கூப்பிட்டிங்களா...?''

''இல்லைம்மா... உன்னை அஃபிஷியல் விவகாரமாத்தான் வரச் சொன்னேன்...''

''கலை, கலாச்சாரத் துறைக்காக் அரசாங்கம் எடுக்கப் போற டாக்குமெண்டரி படம் எதிலாவது நான் நடிச்சுத் தர விரும்பறிங்களா ஸார்...?''

''அதுவும் இல்லை...''

''வேற எதையும் என்னால யூகிக்க முடியலை ஸார்... என்ன விஷயம்ன்னு நீங்களே சொல்லிடுங்க...''

திருச்சிற்றம்பலம் புன்னகையோடு ஆரம்பித்தார்.

''தமிழக அரசின் சிறந்த நடிகைக்கான விருதை நீ வாங்கியிருக்கியா...?''

''இல்லை ஸார்... என்னோட நடிப்பை பல பத்திரிகைகளும் பாராட்டிட்டுத்தான் இருக்காங்க... எந்தப் பாத்திரம் குடுத்தாலும்



சிறப்பா செய்வேன்னு, என்னைப் பாராட்டாதவங்களே இல்லை... ஆனா திரைப்பட உலகம் கவர்ச்சிக் கதாநாயகியா மட்டுமே என்னை உபயோகிச்சிட்டு இருக்கு... நல்ல கதையம்சம் உள்ள படம், எதுவும் எனக்கு அமையறதே இல்லை... அதனால என்னதான் நான் திறமையைக் காட்டி நடிச்சாலும் விருதுகள் என்னைத் தேடி வர்றதே இல்லை ஸார்...''

''கதையம்சம் உள்ள படத்தில் நடிக்கறவங்களுக்குத் தான், விருது குடுக்கணும்ங்கற எண்ணம் தப்பானது... இதை நான் கமிட்டியில எடுத்துச் சொல்லி இருக்கேன்... நீ சமீபத்தில் நடிச்ச **'கண்ணுப்பாண்டி'** சினிமாவை வீடியோல பார்த்தேன். படம் மசாலாதான்... ஆனா உன்னோட பார்ட்டை, நீ அற்புதமா செஞ்சிருந்தே... அம்மா செத்துப் போற காட்சியில, உன்னோட நடிப்பு அபாரமா இருந்தது...''

''தாங்க்யூ ஸார்... தாங்க்யூ வெரிமச்... எனக்கு பெரிய விருதுகள் எதுவும் கிடைக்கலைன்னாலும் பரவாயில்லை... இந்த மாதிரிப் பாராட்டுக்களைக் கேக்கறப்ப மனசு நிறைவாயிடுது...''

''அப்படிச் சொல்லாதேம்மா... விருது கிடைச்சா வேண்டாம்ன்னு சொல்லிடுவியா என்ன...? அதனோட மதிப்பே வேறதானே...''

''மதிப்பு தான்... ஆனா கிடைக்காத ஒண்ணுக்காக ஏங்கறதில்லை ஸார்... விருதுகளைப் பத்தி நான் கவலைப்படறதில்லை...''

''இந்த வருஷம், சிறந்த நடிகைக்கான விருதை உனக்கு நான் சிபாரிசு பண்ணலாம்ன்னு இருக்கேன்... நீ என்ன சொல்றே...?''

திருச்சிற்றம்பலம் சொல்ல - திகைப்பில்

குளித்த முகத்தோடு அவரைப் பார்த்தாள் தாமினி.

"ஸ... ஸார்... நீங்க... எ... என்ன சொல்றிங்க...?"

"இன்னார்க்கு விருது குடுக்கலாம்ன்னு நான் கையைக் காட்டினா கமிட்டில யாரும் எதிர்ப்பேச்சுப் பேச மாட்டாங்க... விருதை வாங்கிக்க நீ தயாரா இருக்கியா...? உன்கிட்டே ஒரு வார்த்தை கேட்டுட்டு, அப்புறமா உன்னை சிபாரிசு பண்ணலாம்ன்னு நினைச்சேன்... நாளைக்கு கமிட்டி கூடுது... அதனாலதான் அவசரமா உன்னைக் கூப்பிட்டேன்..."

மகிழ்ச்சியில் பூத்த முகத்தோடு அவரைப் பார்த்தாள்.

"ஸார்... நீங்க சொன்ன மாதிரி - விருதை வேண்டாம்ன்னு யாராவது சொல்லுவாங்களா...?"

"அரசாங்கத்தையும், விருது கொடுப்பவங் களையும் அவமானப்படுத்தற மாதிரி, சில சமயம் சம்பவங்கள் நடந்துடுது... விருதை அறிவிச்ச பிறகு... 'எனக்கு விருது தேவையில்லை'ன்னு பரபரப்புக்காக சிலர் சொல்லிடறாங்க... போன வருஷம், ஒரு எழுத்தாளர்க்கு விருது குடுத்தப்ப அப்படித்தான் நடந்தது... அதனாலதான் முன் ஜாக்கிரதையா கேட்டுக்கிட்டேன்..."

"நான் அப்படி எல்லாம் நடந்துக்க மாட்டேன் ஸார்... திறமையை மதிச்சு குடுக்கற விருதை வேண்டாம்ன்னு சொல்ல மாட்டேன்..."

"குட்... நீ நம்ம ஆளு... நம்ம பேச்சுக்கு கட்டுப்படற ஆளுங்களுக்கு, விருது குடுத்தாத்தான் நமக்கும் மதிப்பு... அந்த விருதுக்கும் மதிப்பு... நாளைக்கு உன் பேரையே நான் முன் வெச்சிடறேம்மா... இதைப் பத்திப் பேசத்தான் நான் கூப்பிட்டேன்..."



"தாங்க்யூ ஸார்... நான் வர்றேன்..."

தாமினி கையைக் கூப்பினாள்.

"அந்தப் படத்தைப் பார்த்ததிலிருந்து நானும் உன்னோட ரசிகனாயிட்டேன். நேரமிருக்கறப்ப வாம்மா... ஒரு கலைப்படம் தயாரிக்கறதைப் பத்திப் பேசலாம்..."

புன்னகைத்தபடியே பதிலுக்குக் கையைக் கூப்பினார் திருச்சிற்றம்பலம்.

தாமினி புல்வெளியைக் கடந்து சென்று, போர்டிகோவில் நிறுத்தியிருந்த தன்னுடைய காரில் ஏறினாள்.

இக்னீஷியனைத் திருகி, கியரை மாற்றி, வாயில் கதவை நோக்கி காரை வழுக்க விட்டாள்.

பெட்ரோல் மணத்தை மிச்சம் வைத்துவிட்டு கார் அகன்று போயிருந்தது.

திருச்சிற்றம்பலம் குரல் கொடுத்தார்.

"தர்மா..."

அவன் ஓடி வந்தான்.

"அய்யா?"

"என்னமோ சொன்னியே... அவளை வழிக்குக் கொண்டு வர்றது கஷ்டம், அப்படி இப்படின்னு சொன்னியே...?"

"அவளைப் பத்தி விசாரிச்சப்ப எல்லாரும் அப்படித்தான் சொன்னாங்கய்யா... சினிமா இண்டஸ்ட்ரிக்குள்ளே இருந்தாலும், அவ நெருப்பு மாதிரின்னு எல்லாருமே சொன்னாங்க..."

"நெருப்பை பிடிக்கற சாமர்த்தியம் இந்தத் திருச்சிற்றம் பலம் கிட்டே இருக்குடா..."

"அய்யா... உங்களால முடியாதது இல்லை..."

"சாயந்தரம் அவ யாரையும் சந்திக்கறதில்லைன்னு சொன்னாங்க... ஆனா ராத்திரி எட்டு மணிக்கு காரெடுத்துக்கிட்டு அவளை இங்கே வரவழைச்சேன் பார்த்தியா...?

நான் விரிச்ச வலைல, அவ சுலபமா விழுந்துட்டா. ஆஃப்ட்ரால் அவ நடிகைதானே... சேத்துல புரளறவ சந்தனத்தைப் பத்திப் பேசக்கூடாது... இன்னிக்கு செட்டில் ஆகி, புள்ளகுட்டியோட இருக்கற முன்னாள் நடிகைங்கள்ல பல பேர், என்கிட்டே படுக்கை அறையில் ஆசிர்வாதம் வாங்கினவங்கதான்... இவ மட்டும் என்ன விதி விலக்கு...?''

சிவப்பான கண்களை இடுக்கிக் கொண்டு சிரித்தார் திருச்சிற்றம்பலம்.

---

# 3

---

**ஹா**ல் ஜனங்களால் நிரம்பி வழிந்தது.

முன் வரிசை பூராவும் நட்சத்திரப் பட்டாளம். அடுத்த வரிசைகளில் பத்திரிகை நிருபர்கள், விஐபிகள். அமைச்சரின் ஆதரவாளர்களாய் ஆங்காங்கே கரை வேட்டி ஆசாமிகளையும் பார்க்க முடிந்தது.

மேடை ப்ளட் லைட்டின் ஒளியில் சூரியத்தனமாய் தகித்துக் கொண்டிருக்க - அமைச்சர் திருச்சிற்றம்பலம் உட்பட சில விவிஐபிகள் வெல்வெட் நாற்காலிகளை நிறைத்திருந்தார்கள்.

இந்திரலோகத்தில் இருந்து கூரியர் பார்சலில் அப்போது தான் வந்து சேர்ந்தவள் போல கனமான மேக்கப்புடன் ஒரு இளம் நடிகை மைக் முன்னே நின்றிருந்தாள்.

கொஞ்சும் தமிழில் அறிவிப்புகள் செய்து கொண்டிருந்தாள்.

''கண்ணுப் பாண்டி படத்தில் நடித்த தாமினி சிறந்த நடிகைக்கான விருதைப் பெறுகிறார்...''



அவள் சொல்லச் சொல்லவே - மேடைக்குப் பின்னே உயரமான இடத்தில், அமைக்கப்பட்ட பிரம்மாண்டமான திரை உயிர் பெற்றது.

'கண்ணுப் பாண்டி'யிலிருந்து அவள் நடித்த முக்கியக் காட்சி ஒளிபரப்பாக ஆரம்பித்தது.

கலைந்த கோலத்துடன் குடிசை வீட்டுக்குள் நுழையும் தாமினி, ஊதுவத்திப் புகை தலைமாட்டில் அசைய நீளமாய்ப் படுக்க வைக்கப்பட்டிருக்கும் சினிமா அம்மாவின் பிணத்தைப் பார்த்துக் கதறி அழும் காட்சி.

தாமினியின் உச்சகட்ட அழுகையைப் பார்த்து, ஹால் பூராவும் அதிர அதிர கைதட்டல்கள் எழுந்தன.

கைகளைக் கூப்பியபடி உணர்ச்சிவசப்பட்ட முகத்தோடு மேடையில் ஏறினாள் தாமினி.

பெரிய ஷீல்டை வைத்துக் கொண்டு திருச்சிற்றம்பலம் காத்திருந்தார்.

அவருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு ஷீல்டைப் பெற்றுக் கொண்டாள், தாமினி.

அவளிடம் மைக் நீட்டப்பட்டது.

''என் வாழ்நாளில் மறக்க இயலாத தருணம் இது... இந்த விருது கிடைத்ததற்காக, நடுவர்களுக்கும் என் உயிரினும் மேலான ரசிகர்களுக்கும், குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் திருச்சிற்றம்பலம் அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்...''

மைக்கை ஸ்டாண்டில் மாட்டிவிட்டுத் திரும்பினாள்.

திருச்சிற்றம்பலம் புன்னகைத்தார். மெல்ல சொன்னார்.

''தாமினி... வாழ்த்துக்கள்...''

''தாங்க்யூ ஸார்...''

''சும்மா தாங்க்யூன்னு சொன்னா பத்தாது...''

அவள் அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

"எ... என்ன பண்ணணும் ஸார்...?"

"ஒண்ணுமில்லை... இன்னிக்கு சாயந்தரம் உனக்கு என்னோட வீட்டில், சின்னதா ஒரு பார்ட்டி தரலாம்ன்னு இருக்கேன்..."

"பா... பார்ட்டியா...?"

"ஆமா..."

அவள் ஷீல்டை வைத்துக் கொண்டு யோசனையாய் நிற்க - அவர் புன்னகைத்தார்.

"இப்படியெல்லாம் நீ யோசிக்கக்கூடாது... என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து, நீ வருவேங்கற தைரியத்தில் மத்தவங்களையெல்லாம் வரச் சொல்லிட்டேன்..."

"மத்தவங்களா...? யாரு...?"

"டைரக்டர்... கதாசிரியர்..."

"யாரைச் சொல்றிங்க ஸார்...?"

"கலைப்படத்தில் நடிக்கணும்ன்னு உனக்கு மனசுக்குள்ளே ரொம்ப நாளா ஆசை இருக்கில்லையா...? அந்த ஆசையை நிறைவேத்தி வெய்க்கத்தான் அவங்களையெல்லாம் வரச் சொல்லியிருக்கேன்..."

"ஸார். அன்னிக்கு நீங்க பேச்சுக்குச் சொல்றிங்கன்னு நினைச்சேன்..."

"நான் அரசியல்வாதியா இருந்தாலும் பேச்சுக்குச் சொல்லற வேலையெல்லாம் என்கிட்டே கிடையாது... அப்போ நீ சாயந்தரம் ஆறரை மணிக்கெல்லாம் வந்துடு..."

அறிவிப்புப் பெண் அடுத்த கலைஞரை மேடைக்கு வரச் சொல்லியிருக்க - தாமினி அவரிடம் விடை பெற்றுக் கொண்டு மேடையை விட்டுக் கீழே இறங்கினாள்.

அவள் இருக்கையில் சென்று அமரும் வரை விஷச்சிரிப்புடன், அவளையே பார்த்தார் திருச்சிற்றம்பலம்.

# 4

சத்தியமூர்த்தி தாமினியின் முன்னால் பவ்யமாய் வந்து நின்றான்.

"கூப்பிட்டிங்களா மேடம்..."

"ஆமா..."

தலையசைத்த தாமினி கடல் நீல நிற க்ரிஸ்ப் சில்க்கில் தன்னைப் புதைத்திருந்தாள்.

"என்ன விஷயம்...?"

"கால்ஷீட் ரெஜிஸ்டரை அப்டேட் பண்ணி வெச்சிருக்கிங்களா...?"

"எஸ் மேடம்..."

"அதைக் கொண்டு வாங்க..."

சத்தியமூர்த்தி அகன்று சென்றான்.

ஸ்டீல் அலமாரியிலிருந்து ஒரு தடிமனான நோட்டுப் புத்தகத்தைக் கொண்டு வந்தான்.

"அடுத்து ஃப்ரீ டேட்ஸ் எப்போன்னு பாருங்க..."

"இன்னும் அஞ்சு மாசத்துக்கு சின்ன இடைவெளிகூட இல்லாம டைட் ஷெட்யூல் இருக்கு மேடம்..."

"மாசத்தில் நாலு கால்ஷீட் ஃப்ரீயா இருக்குமே...? நீங்கதானே அந்த சிஸ்டத்தை அறிமுகப்படுத்தினிங்க... எதிர்பாராத சூழ்நிலைகளில், அந்த கால்ஷீட்டுகள் உபயோகப்படும்ன்னு முன்னெச்சரிக்கையா விட்டு வெச்சிருப்போமே...?"

"அதெல்லாம் இருக்கு மேடம்..."

"அந்தத் தேதிகளைக் குறிச்சிக் குடுங்க..."

அவன் அவளைத் திகைப்பில் மூங்கிய பார்வை பார்த்தான்.

"இப்ப எதுக்காக அந்தத் தேதிகள் மேடம்...?"

"ஒரு நெருக்கடி நிலைமை வந்திருக்கு... அந்தத் தேதிகளை உபயோகப்படுத்தலாமான்னு யோசிக்கறேன்..."

"கால்ஷீட் க்ளாஷ் எதுவும் சமீபத்தில் வரலையே மேடம்... கடந்த ஆறு மாசமா ஒரு ஷூட்டிங் கூட உங்களால கேன்சல் ஆனதில்லை. நம்ம சிஸ்டத்தை ஃபாலோ பண்ணலாமான்னு எல்லா ஆர்ட்டிஸ்டுகளும் யோசனை பண்ணிட்டிருக்காங்க..."

"இந்த அஞ்சு மாச ஷெட்யூல்ல, ரிசர்வ் பண்ணின நாலு நாட்களைக் கணக்குப் போட்டா மொத்தம் இருபது நாட்கள் கிடைக்குதில்லையா...?"

"எஸ் மேடம்...!"

"அந்த டேட்சை ஒரு தயாரிப்பாளருக்கு கொடுக்கலாமான்னு யோசனை பண்ணறேன்..."

"டைரக்டரோ, தயாரிப்பாளரோ யார் வந்தாலும் நீங்க என்னைக் கை காமிச்சிடுவீங்க... நான் சரி பார்த்து சொல்லற தேதியில் கையெழுத்துப் போட்டுக் குடுப்பிங்க... இப்போ நீங்களே நாள் கணக்கை பார்க்கறது ஆச்சர்யமா இருக்கு..."

"ஒரு விவிஐபிக்கு டேட்ஸ் குடுக்க வேண்டி வரும்... அதனாலதான் நான் நேரடியா இன்வால்வ் ஆயிருக்கேன்..."

"உங்களை அறிமுகப்படுத்தின டைரக்டரே ஒரு முறை கால்ஷீட் கேட்டு வந்தப்ப கால்ஷீட் லெட்ஜர்படி மேனேஜர் சொல்லற தேதிகளைத்தான் தர முடியும். வேற வழியில்லேன்னு ஸ்ட்ரிக்டா சொல்லிட்டிங்க... அவரைவிட விவிஐபி யாரு மேடம்...?"

"அமைச்சர் திருச்சிற்றம்பலம்..."



சத்தியமூர்த்தி திகைப்பு அதிகரித்த விழிகளோடு அவளைப் பார்த்தான்.

"அ... அவரா...?"

"ஆமா... அவர் ஏற்பாடு பண்ணியிருக்கிற பார்ட்டிக்குத் தான் இப்போ நான் கிளம்பிட்டிருக்கேன். அவர் ஒரு படம் பண்ணற ப்ரொப்போசல்ல இருக்கிறதா சொன்னார்."

"அமைச்சர்ங்கறதால உங்க விதிகளைத் தளர்த்தி அவருக்கு சலுகை காட்டறிங்களா மேடம்...?"

"அதுக்காக இல்லை..."

"வேற என்ன காரணம்ன்னு நான் தெரிஞ்சிக்கலாமா...?"

"தாராளமா... அவர் அமைச்சர்ங்கறதால அவரை நான் விவிஐபி ஸ்தானத்தில் வெய்க்கலை... என்ன வெச்சு அவர் ஒரு கலைப்படம் தயாரிக்கிற நோக்கத்தில் இருக்கார்... அதனால தான், அவரை விவிஐபி வரிசையில் சேர்த்தேன்... அதனால தான் அவருக்கு முடிஞ்ச அளவுக்கு முன்னதாக தேதிகள் தரணும்ன்னு நினைக்கிறேன்..."

"திருச்சிற்றம்பலம் கலைப்படம் தயாரிக்கறா...ரா?"

"ஆமா..."

"என்னால நம்பவே முடியலை மேடம்..."

"ஏன்...?"

"ஸ்டேட் பூராவும் அவருக்கு ஊருக்கு ஒரு ஒயின் ஷாப் இருக்கு... ஆனா அவர் எல்லா மேடையிலும் காந்தியத்தைப் பத்தியும் அகிம்சையைப் பத்தியும் பேசியே கைதட்டல் வாங்குவார்..."

"அது அரசியல் சத்தியமூர்த்தி... அதைப் பத்திப் பேச நமக்கென்ன உரிமை இருக்கு..."

''இல்லை மேடம்... இதிலிருந்தே அவரோட தரம் நமக்குப் புரியுதில்லையா...? சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாதவங்களால கலைப்படம் தயாரிக்கவே முடியாது... உங்களை வெச்சு அவர் சம்பாதிக்க திட்டம் போட்டிருக்கார்ன்னுதான் என்னோட மனசுக்குப் படுது...''

''அவருக்கென்ன பணத்துக்கா பஞ்சம்...? ஸ்டேட் பூராவும் அவரோட ஒயின் ஷாப் இருக்குன்னிங்க... அதில் கிடைக்காத பணமா, ஒரு சினிமாவில் அவருக்குக் கிடைச்சிடப் போகுது...?''

''உங்களோட ஆர்க்யூ பண்ண எனக்குத் தெம்பில்லை மேடம்... நீங்க என்னைத் தப்பா நினைச்சுகிட்டாலும் பரவாயில்லை... நான் உங்க வெல்விஷர்... அதனால என்னோட மனசில் பட்டதை உங்ககிட்டே சொல்லித்தான் ஆகணும்... திருச்சிற்றம்பலத்தை நம்பாதிங்க... ஏன்னா அவர் ஒரு கை தேர்ந்த அரசியல்வாதி... ஏதோ ஒரு வகையில் உங்களை ஏமாத்தப் பார்க்கிறார்ன்னுதான் என் உள் மனசு சொல்லுது...''

தாமினி அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''என்கிட்டே பேசினப்பவெல்லாம் அரசியல்வாதி முகத்தைக் கழட்டி வெச்சிட்டு ப்ளெயினாத்தான் பேசினார்... அவரை தூரத்தில் இருந்து பார்க்கறதால, நீங்க இப்படி சொல்லுறிங்க... ஒரு தடவை அவர்கிட்டே நேரடியாப் பேசிப் பார்த்திங்கன்னா, அவரைப் பத்தின உங்க கருத்தை மாத்திக்குவிங்க...''

சொல்லிக் கொண்டே கால்ஷீட் புத்தகத்திலிருந்த தேதிகளை மனசில் குறித்துக் கொண்டு, காரை நோக்கி நடந்தாள் தாமினி.

# 5

**தா**மினி பங்களாவுக்குள் காரை நுழைத்து நிறுத்திய போது, அங்கே ஒரு பிடிவாத நிசப்தம் நிலவியது.

போர்டிகோ படிகளேறி, காலிங் பெல்லை அழுத்தினாள்.

உள்ளே இசை சிதறியதைத் தொடர்ந்து தர்மா வந்தான்.

அவளைப் பார்த்ததும் சின்னப் பரபரப்போடு வரவேற்றான்.

''வாங்கம்மா...''

''அமைச்சர் இருக்காரா...?''

''அய்யா உள்ளே இருக்கார்... உங்களைத்தான் எதிர்பார்த்துட்டிருக்கார்... வாங்கம்மா...''

அவன் பின்னால் நடந்தாள் தாமினி.

ஹோவென்று நிசப்தம் காத்த ஹாலைப் பார்த்துக் குழப்பமடைந்த கண்களோடு அவனிடம் கேட்டாள்.

''யாரையும் காணோமே...?''

''அய்யாவோட வீடு ராஜீவ் நகர்ல இருக்கு... அங்கேதான் கட்சிக்காரங்க வரப் போக இருப்பாங்க... இது அய்யாவோட ரெஸ்ட் ஹவுஸ்... இங்கே யாரோட தொந்தரவும் இருக்காது...''

''நான் அதைக் கேக்கலை... பார்ட்டிக்கு யாரும் வரலையா...?''

''பார்ட்டியா...?''

''பார்ட்டி இருக்குதுன்னுதானே என்னை வரச்சொன்னார் அவர்...''

''எனக்கு அதைப் பத்தித் தெரியலைம்மா...''

அவள் - குழப்பம் நீடிக்க அவனுடன் நடந்தாள்.

ஹாலை ஒட்டினாற்போல இருந்த, ஓர் அறையின் வாசல்வரை வந்தவன் அங்கேயே நின்று கொண்டான்.

''அய்யா இந்த ரூமில்தான் இருக்கார்...''

அவள் தயக்கமாய் உள்ளே சென்றாள்.

வரவேற்பறை மாதிரி இருந்த அந்த அறையில் மங்கலாய் மஞ்சள் வெளிச்சம் பரவியிருந்தது.

கலர் டிவியில் வண்ணங்கள் அசைந்தன.

திருச்சிற்றம்பலத்தின் கரகரப்பான குரல் கேட்டது.

''வாம்மா தாமினி...''

அவள் நெற்றியைச் சுருக்கிக் கொண்டு அவருக்கு எதிரே வந்து நின்றாள்.

''உக்காரும்மா...''

அவர் காட்டின எதிர் சோபாவில் அமர்ந்து கொண்டே கேட்டாள்.

''ஸார்... பா... பார்ட்டி இல்லையா...? கேன்சல் ஆயிடுச்சா?''

''யார் சொன்னது பார்ட்டி இல்லைன்னு...?''

''யாரையுமே காணோமே...?''

''நீதான் வர வேண்டியிருந்தது. நீ வந்தாச்சு. இன்னும் யார் வரணும்...?''

''அந்த ஆர்ட் பிலிம் சம்பந்தமா பேச டைரக்டரும், கதாசிரியரும் வருவாங்கன்னு சொன்னிங்களே...?''

''வந்திருக்காங்களே...?''

''என்ன ஸார் சொல்றிங்க...? எங்கே வந்திருக்காங்க...?''

''நான்தான் டைரக்டர்... நான்தான் கதாசிரியர்...''



தாமினியின் ஆச்சர்யம் இன்னும் அதிகரித்தது.

''நீங்களா...?''

''ஏம்மா, என்னைப் பார்த்தா அப்படித் தெரியலையா...? ஸ்கூல் நாட்கள்ல நான் நாடகமெல்லாம் போட்டிருக்கேன்... அந்த கலை தாகம்தான், என்னை கலை - கலாச்சாரத் துறை அமைச்சரா ஆக்கியிருக்கு.''

''எ... என்னால நம்பவே முடியலை ஸார்.''

''கதாசிரியர் - டைரக்டர்ன்னு நெத்தியில எழுதியா ஒட்டி இருக்கும்...?''

''கதையை எனக்குச் சொல்ல முடியுமா ஸார்...?''

''என்ன அவசரம்... விருந்தை சாப்பிட்டுகிட்டே பேசலாம்...''

''ஸார்... நான் ஆர்வமா வந்ததுக்குக் காரணமே ஆர்ட் பிலிம் பத்திப் பேசத்தான் ஸார்.''

''பேச மாட்டேன்னா சொன்னேன்?''

''உடனே கதையைத் தெரிஞ்சிக்கணும்னு ஆவலா இருக்கு ஸார்... காத்திருக்க பொறுமை இல்லை... அவுட்லைனையாவது சொல்லுங்க...''

''சொல்றேன்...'' என்று சொல்லி சில விநாடி கண்ணை மூடியவர் மெதுவாய் வார்த்தைகளை வெளியிட ஆரம்பித்தார்.

''ஒரு செல்வாக்கான அரசியல்வாதி. எதேச்சையா வீடியோவில் ஒரு சினிமா பார்க்கிறான்... அதில் நடிக்கற நடிகையை அவனுக்கு ரொம்பப் பிடிச்சிப் போயிடுது... அவன் செல்வாக்கை வெச்சு அவளுக்கு விருதெல்லாம் வாங்கித் தர்றான்... அந்த ஒண்டிக்கட்டை அரசியல்வாதியின் அன்பில் மயங்கிப் போயி அவ அவனையே அவனுக்குக் கொடுத்துடறா...''

தாமினி முகம் கறுத்துப் போய் அவரைப் பார்த்தாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கறே...? கதை எப்படி இருக்கு...? ஆர்ட் பிலிம் கதையெல்லாம் இப்படித்தானே இருக்கணும்...?''

''ஸார்! நீங்க ஏதோ உள் நோக்கத்தோட பேசற மாதிரி இருக்கு...''

''உள் நோக்கம்னு சொன்னா என்னவோ போலிருக்கு... கைம்மாறை எதிர் பார்த்துப் பேசறேன்னு வெச்சிக்கயேன்... சினி பீல்டில் இருக்கற உனக்கு ரொம்ப விலாவாரியா சொல்லத் தேவையில்லைன்னு நினைக்கிறேன்... நான் நினைச்சிருந்தா கண்டிஷன் போட்டுட்டு அப்புறமா விருதுக்கு உன் பேரை சிபாரிசு பண்ணியிருக்கலாம்... அப்படியெல்லாம் நான் செய்யலையே... நீ ஏமாத்த மாட்டேன்னு எனக்கு நம்பிக்கை இருந்தது...''

''சினி பீல்டில் இருந்தாலும் நீங்க நினைக்கற ரகமில்லை ஸார் நான்...''

''என்னம்மா... விருதை வாங்கிட்டு, நீ இப்போ திடீர்னு பல்டி அடிச்சா எப்படி...? நான் எவ்வளவு ஆசையா காத்திட்டிருந்தேன்...''

''பார்ட்டிக்குக் கூப்பிட்டு நீங்க இப்படியெல்லாம் பேசறது கொஞ்சம் கூட நல்லா இல்லை...''

''அட... என்ன நீ இப்படிப் பேசறே...? பார்ட்டிக்கு கூப்பிட்டாலே என்ன அர்த்தம்னு உனக்குத் தெரியாதா...?''

''உங்களை மரியாதைக்குரிய இடத்தில் வெச்சிருந்தேன். அதனால நீங்க பார்ட்டின்னு சொன்னப்ப, நான் விகல்பமா எதுவும் நினைக்கலை... ஆறு மணிக்கு மேல நான் வெளி ஆட்கள் யாரையும் சந்திக்கறதே இல்லை... நீங்க பெரிய மனுஷர்ங்கற நம்பிக்கையில்தான்



உங்களை சந்திக்க வந்தேன்...''

''உன்னை மாதிரி அழகான பொண்ணுக்கு முன்னால பெரிய மனுஷன் என்ன? சின்ன மனுஷன் என்ன...? ஆறு மணிக்கு மேலே யாரையும் சந்திக்காத நீ, நான் கூப்பிட்டதும் ஓடி வந்தே...! அதையே நான் நீ எனக்குக் கொடுத்த சிக்னலா நினைச்சிக்கிட்டேன்... என் மேலே எந்தத் தப்பும் இல்லை...''

திகைத்துப் போய் அவரைப் பார்த்தாள்.

''ஸார்... உங்க வயசுக்கும், பதவிக்கும் நான் தந்த மரியாதையை நீங்க இப்படித் தப்பான அர்த்தத்தில் எடுத்துக்குவிங்கன்னு நினைக்கவேயில்லை... இப்பவும் நான் சொல்றேன்... நீங்க அவசரப்பட்டு என்னைத் தப்பா நினைச்சிட்டிங்க... இனிமே அந்த எண்ணத்தோட என்கிட்டே பேசாதிங்க... நான் வர்றேன்...''

இறுக்கமான குரலில் அவள் சொல்ல - திருச்சிற்றம்பலம் அலட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

''இன்னும் உனக்கு என்னவெல்லாமோ செய்யலாம்னு இருக்கேன்... திடீர்னு நீ இப்படி கற்புக்கரசி மாதிரிப் பேசறியேம்மா தாமினி...''

''சினி பீல்டில் இருந்தாலும் நான் கற்புக்கரசிதான் ஸார்... எத்தனையோ பேர் எனக்கு எப்படி எப்படியெல்லாமோ வலை விரிச்சிருக்காங்க... யார்கிட்டேயும் நான் சோரம் போனதில்லை...''

''சரி நானே ஆரம்பிச்சு வெய்க்கறேன்...'' என்று சொல்லிக் கொண்டே நெருங்கியவரின் கன்னத்தில் ரப்பென்று அறைந்து தள்ளிவிட்டு, தாமினி வேகமாய் அங்கிருந்து வெளியேறினாள்.

சுள்ளென்று எரியும் கன்னத்து தசையைப்

பற்றிக் கொண்டு அவளை வெறித்தார் திருச்சிற்றம்பலம்.

---

## 6

---

இரண்டாம் நாள் காலை.

தாமினி ஷூட்டிங்கிற்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். வாசலில் நிழலாட திரும்பினாள். சத்தியமூர்த்தி தெரிந்தான்.

''வாங்க...! ஷூட்டிங் ஸ்பாட்டிலிருந்து போன் பண்ணினாங்களா...?''

''இல்லை மேடம்...''

''வேறென்ன...?''

''அன்னிக்கு நீங்க மந்திரிகிட்டே போனப்பவே, நான் உங்களைப் போக வேண்டாம்ன்னு... எச்சரிக்கை பண்ணினேன். நீங்க கேக்கலை.''

''அவருக்குள்ளே இப்படி ஒரு மிருக புத்தி இருக்கும்ன்னு நான் நினைக்கலை சத்தியமூர்த்தி... இப்போ என்ன ஆச்சு...?''

''இங்கே பாருங்க...''

திரும்பினாள் தாமினி.

சத்தியமூர்த்தியின் கையில் ஒரு வாரப் பத்திரிகை இருந்தது.

அதில் ஒரு பக்கத்தைப் புரட்டி அவளிடம் தந்தான்.

தாமினியின் உதடுகளை மட்டும் பெரிதாகப் பிரசுரித்து, அதற்கருகே கட்டம் கட்டி செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

**திரையுலக கண்ணகியாக தன்னை காட்டிக் கொள்ளும் மினி நடிகைக்கும், அம்பலத்து அமைச்சருக்கும் உறவு துளிர்க்க**



**ஆரம்பித்துள்ளது. மாலை வேளைகளில் யாரையும் சந்திக்க மாட்டேன் எனப் பிடிவாதம் பிடித்து வந்த நடிகை, அமைச்சருக்கு மட்டும் பிரத்யேக அப்பாயின்மென்ட் கொடுக்கிறார். அமைச்சரின் ஓய்வு மாளிகையில் உறவு, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்கிறது.**

செய்தியைப் படிக்கப் படிக்க உஷ்ணமானாள் தாமினி

''இது என்ன அநியாயம்... தரமான பத்திரிகையில் இப்படி ஒரு செய்தியா...? உடனே இதுக்கு மறுப்பு எழுதிப் போடுங்க...''

''அப்படி நாம மறுப்பு எழுத முடியாது மேடம்...''

''ஏன்...?''

''அவங்க நேரடியா உங்களைக் குறிப்பிடலை... நாம மறுப்பு குடுத்தோம்ன்னா இன்னமும் இந்த விஷயம் வெளிச்சத்துக்கு வந்துடும்...''

''அதுக்காக இதை இப்படியே விட்டுட முடியுமா...?''

''அது மட்டுமில்லை... இது நிச்சயமா அமைச்சரோட வேலைதான்... நாம மறுப்பு எழுதினா பத்திரிகை அதைப் பிரசுரம் பண்ணுமாங்கறது சந்தேகம்தான்...''

''வேற பத்திரிகைல நாம இதைப்பத்தி பேட்டி குடுப்போம்.''

''திருச்சிற்றம்பலம் ஒரு கன்னிங் பேர்வழி... நாம அவருக்கு எதிரா ஏதாவது செய்யப் போனா அதையெல்லாம் அவர் நமக்கு பாதகமாக திசை திருப்பி விடுவார்...''

''இப்ப என்னதான் செய்யறது...?''

''அவரோட பேச்சுக்கு நீங்க மதிப்புக் குடுத்து

போனது தப்பு...''

''அதான் நடந்து முடிஞ்சிருச்சே... இனிமே என்ன பண்ணறது...? அதைச் சொல்லுங்க...''

''அவராப் பார்த்து மனமிரங்கி நம்மை விட்டாத்தான் உண்டு. அவர் தொந்தரவு கொடுத்துட்டுத்தான் இருப்பார்...''

''என்ன சத்தியமூர்த்தி இப்படிச் சொல்லறிங்க...?''

''அவரோட குணம் தெரிஞ்சவங்க அப்படித்தான் சொல்றாங்க மேடம்... 'நாங்க சின்ன ஆளுங்க... எங்களை விட்டுடுங்க'ன்னு அவர்கிட்டே கெஞ்சிப் பார்க்கலாம்... மனசு மாறினார்ன்னா அது நம்ம அதிர்ஷ்டம்...''

''கெஞ்சறதா... நெவர்... அவரை எதிர்த்து நான் பேட்டி குடுக்கத்தான் போறேன்... அவரோட வண்டவாளத்தையெல்லாம் மக்கள் மத்தியில எடுத்துச் சொல்லப் போறேன்...''

சத்தியமூர்த்தி ஏதோ மறுத்தலாய்ச் சொல்ல வர, அவனைக் கையமர்த்தி விட்டு அவள் வேகமாய் டெலிபோனை நோக்கிச் சென்றாள்.

எண்களைச் சுழற்றினாள்.

மறுமுனையில் 'ஹலோ...' என்ற குரல் கேட்டதும் கோபமாய் வார்த்தைகளை இரைத்தாள்.

''மினிஸ்டர்கிட்டே பேசணும்...''

''யார் நீங்க...?''

''நீ யாரு...? கார் டிரைவர் தர்மாவா...?''

''அ... ஆமாங்க...''

''நான் நடிகை தாமினி பேசறேன்... அவரைப் பேசச் சொல்லு...''

''ஒரு நிமிஷம் லைன்ல இருங்க...''

தாமினி காத்திருந்தாள்.

சொற்ப விநாடிகளுக்குப் பின்



திருச்சிற்றம்பலத்தின் கரகரப்புக் குரல்.

''ஹலோ''

''நான் தாமினி பேசறேன்...''

''ஆச்சர்யமா இருக்கே...''

''ஆச்சர்யப்படறதுக்கு என்ன இருக்கு...? நீங்க செஞ்சிருக்கறது உங்களுக்கே நல்லா இருக்கா...?''

''என்னம்மா செஞ்சிட்டேன்...?''

''இந்த வார **முன்னோடி** வாரப் பத்திரிகைல என்னைப் பத்தி தாறுமாறா எழுத வெச்சிருக்கிங்களே...?''

''என்னம்மா சொல்றே...? உன்னைப் பத்தி நான் எழுத வெச்சேனா...?''

''ஒண்ணுமே தெரியாதவர் மாதிரி நடிக்க வேண்டாம் ஸார்... நான் உங்க பங்களாவுக்கு வந்துட்டுப் போனதைத் திரிச்சி எழுதியிருக்காங்க...''

''அப்படியா...? அவங்க அப்படி எழுதினதுக்கு நான் என்ன செய்ய முடியும்?''

''உங்க மூலமாகத்தான் விஷயம் வெளியே போயிருக்கணும்... நான் உங்களோட ஒத்துப் போகாததால, நீங்க என்னைப் பத்தி இப்படி மோசமான கருத்தை, பரப்பத் துணிஞ்சிட்டிங்க...''

''அட... எனக்கு ஒத்துழைப்புத் தராம நழுவிப் போனப்ப உனக்கு கொஞ்சம் கூட காமன்சென்ஸ் கிடையாதுன்னு நினைச்சேன்... இருக்கும் போலிருக்கே... இருந்துமா சத்தமில்லாம என்னோட ஒத்துப் போகாம போனே?''

''ஸார்... அநாவசியமா அரட்டை அடிக்க நான் போன் பண்ணலை. அந்தச் செய்திக்கு மறுப்பு தெரிவிச்சு நீங்க அந்தப் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுங்க...''

''இல்லைன்னா?''

"இல்லைன்னா, நடந்தது என்னன்னு வேற ஒரு பிரபல பத்திரிகைல, நான் தெளிவுபடுத்த வேண்டி வரும்."

"தாமினி..." என்று ஆரம்பித்து திருச்சிற்றம்பலம் ஏதோ சொல்ல வர, தொடர்பைத் துண்டித்தாள் தாமினி.

---

## 7

---

**வா**சலில் பைக் வந்து நின்றது.

ஒரு இளம் பெண்ணும், இளைஞனும் இறங்கி வந்தார்கள். இளைஞனின் தோளில் காமிரா தொங்கியது. அந்தப் பெண் கையில் குறிப்புப் புத்தகம் வைத்திருந்தாள். இடுப்பு அருகே ஜீன்ஸ் பேன்ட்டின் பெல்ட் லூப்பில் வாக்மென் அடக்கமாய்த் தெரிந்தது.

உள்ளே நுழைந்தார்கள்.

அறை மூலையில் சத்தியமூர்த்தி தெரிந்தான்.

நேராக அவனிடம் சென்று தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

"**லேசர்** வார இதழ்ல இருந்து வர்றோம்... தாமினி எங்களை போன் பண்ணி வரச் சொன்னாங்க."

"ஒரு நிமிஷம் உக்காருங்க..."

சோபாவில் அவர்கள் இருவரையும் அமரச் சொல்லி விட்டு, இண்ட்டர்காம் பொத்தான்களை அழுத்தினான் சத்தியமூர்த்தி.

"மேடம்... **லேசர்** வீக்லில இருந்து ரெண்டு பேர் வந்திருக்காங்க..."

"அவங்களை மேல அனுப்பி வைங்க சத்தியமூர்த்தி..."



ரிசீவரைச் சாத்தி விட்டு அவர்களிடம் திரும்பினான்.

"மேடம் உங்களை மேல வரச் சொல்றாங்க..."

அவனுக்கு ஒரு நன்றியை உதிர்த்து விட்டு, இருவரும் வளைந்து செல்லும் மாடிப் படிகளில் தடதடத்தார்கள்.

கார்ப்பெட் விரித்த வராந்தாவைத் தொட்டபோது - அருகாமை அறையிலிருந்து தாமினியின் குரல் வெளிப்பட்டது.

"வாங்க..."

இருவரும் திரும்பினார்கள்.

தலையில் மாட்டியிருந்த வாக்மென் ஹெட்போனைக் கழற்றி வைத்துக் கொண்டே புன்னகைத்தாள் தாமினி.

எதிரே இருந்த ஃபோம் சோபாவைக் காட்டி அவர்களை அமரச் சொன்னாள்.

அந்தப் பெண் அமர்ந்தபோது, இளைஞன் தோளில் தொங்கிய காமிராவை, வேகமாய் உயிர்ப்பித்து, பளிச்சென்று மின்னலைத் துப்பி, தாமினியை ஒரு ஷாட் எடுத்தான்.

அவள் அரசாங்க விருது வாங்கியதற்காக பத்திரிகை சார்பாக, பாராட்டுகளைத் தெரிவித்து விட்டு கேள்வியைத் துவக்கினாள்.

"பரபரப்பான ஒரு விஷயத்தைப் பத்தி பேட்டி தரப்போறதா போன் பண்ணினீங்க... எதை பத்தின விஷயம்?"

"இன்னிக்கு ஒரு பத்திரிகைல என்னைப் பத்தி தாறு மாறா ஒரு 'கிசுகிசு' வந்திருக்கு... பெயரைக் குறிப்பிடலைன்னாலும் என்னைப்பத்தின 'கிசுகிசு'ன்னு பாமர ரசிகனுக்குக் கூடத் தெரிஞ்சிடும்... அந்த மாதிரி வார்த்தைகளை உபயோகிச்சுத்தான் 'கிசுகிசு'வை எழுதியிருக்காங்க... அந்த உண்மைக்குப் புறம்பான செய்திக்கு, நான் பதில்

சொல்லியே ஆகணும்..."

அந்த நிருபர் பெண்ணும், இளைஞனும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"**முன்னோடி** வார இதழ்ல அமைச்சர் திருச்சிற்றம்பலத்தையும், உங்களையும் தொடர்புபடுத்தி வந்த 'கிசுகிசு'வைத்தானே சொல்றிங்க...?"

"ஆமா..."

"நடந்தது என்ன...? அந்த 'கிசுகிசு'வில் குறிப்பிட்டபடி நீங்க அமைச்சரோட கெஸ்ட் ஹவுஸ் பங்களாவுக்குப் போகலையா...?"

"போயிருந்தேன்..."

"அடிக்கடி போயிருக்கிங்களா...?"

"ரெண்டே முறைதான் போயிருக்கேன்..."

"எதுக்காக போனிங்கன்னு சொல்ல முடியுமா...?"

"சொல்றேன்... அதைத் தெளிவாகச் சொல்லத்தான் உங்களைப் பேட்டி எடுக்க நான் வரச் சொன்னேன்... அங்கே நடந்த விஷயமே வேற. அமைச்சரோட ப்ரஷர்லீ அந்த 'கிசுகிசு' தாறுமாறா என்னை விமர்சிச்சு வெளியாகியிருக்கு."

"அமைச்சரோட ப்ரஷர்ல வெளியாகியிருக்குன்னா சொல்றிங்க...?"

"ஆமா..."

"அவர் எதுக்காக ப்ரஷர் தரணும்... நீங்க மேடையில் விருது வாங்கறப்ப, அமைச்சருக்கு பிரத்யேகமா நன்றி சொன்னிங்க... அவருக்கும், உங்களுக்கும் நல்ல அண்டர்ஸ்டாண்டிங் இருக்கற மாதிரித்தானே தெரிஞ்சுது?"

"அது, **'மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்'** அப்படிங்கறது கடைசியா அமைச்சர் வீட்டுக்குப் போனப்பதான் தெரிஞ்சுது..."

"யாரை, யார் தப்பா புரிஞ்சிருந்தாங்க...?"



"ரெண்டு பேருமே ஒருத்தரை, ஒருத்தர் தப்பா புரிஞ்சிக் கிட்டிருந்தோம்..."

"விளக்கமா சொல்லுங்க..."

"அவர் பெரிய மனுஷர்... என்னோட தகப்பன் ஸ்தானத்தில் நான் அவரைப் பார்த்தேன். என்னை அவர் போனில் வரச் சொன்னப்ப, மரியாதை நிமித்தமா அவரைப் போய்ப் பார்த்தேன்... என்னோட நடிப்புத் திறமையைப் பாராட்டினார். விருதுக்கு சிபாரிசு பண்ணறேன்னார். போன தலைமுறையைச் சேர்ந்த ஒருத்தர், சின்னப் பெண்ணான என்னோட நடிப்பை பாராட்டறப்ப எனக்கு அது சந்தோஷமா இருந்தது... அவரோட ரசனைக்குத் தலைவணங்கினேன். விருதை ஏத்துக்கறதா சொன்னேன். அவர் கல்மிஷமான மனசோட, என்கிட்டே பேசியிருக்கார்ன்னு லேட்டாத்தான் எனக்குப் புரிஞ்சது... விருது வாங்கித் தந்ததுக்குப் பிரதிபலனா என்னோட கற்பை விலை பேசினார். நான் கோபமா பேசிட்டு அங்கிருந்து வந்துட்டேன். இப்போ திரைமறைவில் அவரோட வேலைத்தனத்தைக் காட்ட ஆரம்பிச்சிருக்கார்..."

அந்த நிருபர் பெண் மெல்லச் சொன்னாள்.

'நாங்க **'முன்னோடி'** பத்திரிகையைத் தொடர்பு கொண்டு அந்த 'கிசுகிசு' பத்தி காலையில் விசாரிச்சோம்... திரை உலகத்தில், **'மிஸ் க்ளீன்'**னு பேர் எடுத்தவங்க நீங்க... அது எல்லோருக்குமே தெரியும்... உங்களைப் பத்தி தப்பா ஒரு நியூஸ் வந்தா, அதை நீங்க ஒரு கை பார்த்துடுவீங்கன்னும் தெரியும்... இந்த செய்தியை எப்படி வெளியிட்டீங்கன்னு அவங்ககிட்டே விசாரிச்சோம்..."

தாமினி நிமிர்ந்து அவளைப் பார்த்தாள்.

"அவங்க என்ன சொன்னாங்க...?"

"ஆதாரத்தோடதான் அந்த செய்தியை

அவங்க வெளியிட்டிருக்காங்களாம்.''

''என்ன ஆதாரம்...?''

''நீங்க அமைச்சர் வீட்டுக்கு இரவு நேரங்களில் போனதுக்கான, புகைப்பட ஆதாரங்கள் அவங்ககிட்டே இருக்காம்...''

தாமினி உறைந்து போய் அவளைப் பார்க்க - அவள் தொடர்ந்தாள்.

''அமைச்சர்மேல இவ்வளவு பெரிய குற்றச்சாட்டை நீங்க தொடுக்கறிங்க... உங்க குற்றச்சாட்டுக்கு வலுவான ஆதாரம் எதையாவது உங்களால் தர முடியுமா...?''

''ஆ... ஆதாரமா...? எதுவும் இல்லையே...''

''ஆதாரம் எதுவும் இல்லாம அமைச்சரா இருக்கற அவர் மேல, பயங்கரமா குற்றம் சாட்டும் உங்க பேட்டியை நாங்க எப்படி வெளியிட முடியும்...? நாங்கன்னு இல்லை... எந்தப் பத்திரிகையுமே இந்த விஷயத்தை வெளியிடத் தயங்குவாங்க...''

''நான் சொல்லறது அத்தனையும் நடந்த நிஜம்...''

''அவரும் அப்படித்தான் சொல்லுவார். அவதூறு வழக்குப் போட்டார்ன்னா கோர்ட்டுக்கு நடந்து நடந்தே கால் தேய்ஞ்சிடும்... அவர் சொல்ற விஷயத்தை ஊர்ஜிதப்படுத்தற மாதிரி, ஆதாரங்கள் வெச்சிருக்கார்... அவரோட வீட்டுக்குப் போனதை நீங்களே ஒத்துக்கறிங்க... ஆனா, அதே மாதிரி, நீங்க சொல்றதை ஊர்ஜிதப்படுத்தற மாதிரி சின்ன ஆதாரம் கூட உங்கிட்டே இல்லையே...?''

அந்த இளைஞனும் அவளை ஆமோதித்தான்.

''எஸ் மேடம்... ஆதாரத்தோட நீங்க பேட்டி கொடுத்தா, கவர் ஸ்டோரியே வெளியிட நாங்க தயாரா இருக்கோம்... ஆனா மொட்டையா செய்திகளை வெளியிட முடியாது...



பத்திரிகையோட நம்பகத் தன்மை பாதிக்கப்படும்... வி ஆர் வெரி ஸாரி...''

இருவரும் விடைபெற்றுச் செல்ல - உறைந்து போய் உட்கார்ந்திருந்தாள் தாமினி.

அவர்கள் சென்ற பத்தாவது நிமிஷம் டெலிபோன் உச்சஸ்தாயியில் வீறிடத் துவங்கியது.

ரிசீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

மறுமுனையில் திருச்சிற்றம்பலம் சிரிப்புடன் குரலை வெளியிட்டார்.

''என்னம்மா...! லேசர் கதிர், நீ சொல்லற மாதிரியெல்லாம் பாய மாட்டேன்னுடுச்சா...?''

''.......''

''என்ன சைலண்ட் ஆயிட்டே...? நடக்கறது நம்ம ஆட்சி...! அதிகாரம் என்னோட கையில்... என்னை மீறி இங்கே எதுவும் நடக்க முடியாது... இன்னும் எத்தனை பத்திரிகைல வேணா முயற்சி பண்ணிப் பாரு... எவனுமே உன் பேச்சை வெளியிட மாட்டான்... உன்னை மாதிரி பத்து மடங்கு 'பிகு' பண்ணிகிட்ட பொண்ணுங்களெல்லாம் கடைசியில், என்னோட ஒத்துப் போயிருக்காங்க... என்னோட கவனத்தைக் கவர்ந்தாச்சுன்னா, ஒரு தடவையாவது எனக்கு நீ முந்தானையை விரிச்சுத்தான் ஆகணும்... வேற வழி இல்லை...''

அவர் பேசப் பேச தாமினிக்குள் ஆத்திர ஊற்றுக்கள் பெருக்கெடுத்தன.

''உனக்கு ஒத்துப் போகலைன்னா என்னடா செய்வே?''

அவர் சிரித்தார்.

''உன்னை மாதிரி அழகான பெண்கள் கோபத்தில் 'டா' போட்டுப் பேசினா, பதிலுக்கு நான் கோபப்பட மாட்டேன்... ரசிப்பேன்... எங்கே

இன்னொரு தடவை ஆசையா என்னை 'டா' போட்டுக் கூப்பிடு..."

"யு... யு..."

"இங்கிலீஷில் எப்படி 'டா' போடறதுன்னு தெரியாம யோசிக்கறியா...?"

தாமினி கோபத்தைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

"இங்கே பாருங்க... நீங்க நடந்துக்கறது உங்க பதவிக்கும் வயசுக்கும் கொஞ்சம்கூடப் பொருத்தமா இல்லை..."

"பப்ளிக் லைஃபையும், பர்சனல் லைஃபையும் போட்டுக் குழப்பாதேம்மா தாமினி... எங்கே எப்படி நடந்துக்கணுமோ அதுக்குத் தகுந்த மாதிரி நான் நடந்துக்குவேன்... ஒரே ஒரு ராத்திரியை என்னோட கழிச்சுப் பாரு... 'உங்களுக்கு அம்பத்தோரு வயசா...? என்னால நம்பவே முடியலை'ன்னு நீ பாராட்டுவே..."

"சே... ஒரு தெருப் பொறுக்கி மாதிரி பேசற உங்களுக்குப் போய், ஓட்டுப் போட்டு நாற்காலில உக்கார வெச்சிருக்காங்களே... அவங்களைச் சொல்லணும்..."

"அட! தெலுங்குப் பட வசனமெல்லாம் பேச ஆரம்பிச்சிட்டியே... அதெல்லாம் டப்பிங் தியேட்டரோட நிறுத்திக்கோ... மறுபடி எப்ப சந்திக்கலாம்...? நீயே ஒரு நல்ல நாளாக் குறிச்சி சொல்லு..."

"நான் அப்படிப்பட்டவ இல்லைன்னு உங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லணுமா...?"

"நான் எப்படிப்பட்டவன்னு நானும் உனக்கு திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய அவசியமில்லைன்னு நினைக்கறேன்... அகிம்சை வழில உன் கூட பேச்சு வார்த்தை நடத்தறது இன்னியோட முடிஞ்சது... இனிமே என்னோட அடுத்த கட்ட முறையை



ஆரம்பிச்சிடுவேன்..."

"என்ன செய்விங்க...?"

திருச்சிற்றம்பலம் மந்தகாசமாய்ச் சிரித்தார்.

"சொல்ல மாட்டேன்... செஞ்சு காமிக்கறேன்..."

எதிர்முனை 'லொட்'டென்று கவிழ்ந்தது.

---

## 8

---

டைரக்டர் 'பேக்கப்' சொல்ல - தாமினி அறைக்கு வந்து மேக்கப்பைக் கலைத்தாள்.

உடை மாற்றிக் கொண்டு வெளியே வந்தாள்.

அந்த அவுட்டோர் ஷூட்டிங் ஸ்பாட்டில் வேடிக்கை பார்க்கக் கூடியிருந்த, பெரும்பாலான ஜனங்கள் கலைந்து போயிருக்க - ஒரு சிலர் மட்டும் அவளிடம் ஆட்டோக்ராஃப் வாங்குவதற்காக பிடிவாதமாய்க் காத்திருந்தார்கள்.

அவள் வெளியே வந்ததுமே மொய்த்துக் கொண்டார்கள்.

நீட்டிய ஆட்டோக்ராஃப் புத்தகங்களிலெல்லாம் கையெழுத்தைக் கிறுக்கித் தந்துவிட்டு, சத்தியமூர்த்தியின் உதவியோடு அங்கிருந்து அகன்றாள்.

காருக்கு வந்தாள்.

"அவுட்டோர் வந்துட்டா ரசிகர்கள் கிட்டே இருந்து தப்பிக்கவே முடியாது சத்தியமூர்த்தி..."

"பழகிப் போன விஷயம்தானே மேடம்..."

"பழகிப் போன விஷயம்தான்... ஆனா இப்போ லேசா பயமா இருக்கு..."

"பயமா இருக்கா...? எதனால...?"

"அந்த திருச்சிற்றம்பலம் கிட்டே முறைச்சிக்க

ஆரம்பிச்ச நாளிலிருந்து, கும்பலா யாராவது வந்தாங்கன்னா மெல்லிசா மனசுக்குள்ளே பயம் உண்டாகுது... அந்த ஆள் டெலிபோன்லயே பயங்கரமா கறுவியிருக்கான்...''

''மேடம்... ஆரம்பத்திலேயே அந்த ஆளை நீங்க 'கட்' பண்ணியிருக்கணும்... அந்த ஆளுக்கு இடம் குடுத்துட்டீங்க...''

''தெரியாம அவனை மதிச்சிட்டேன்... அதையே நீங்க திருப்பித் திருப்பி சொல்றதால என்ன பிரயோஜனம்...? இப்போதைய நிலைமைக்கு என்ன பண்ணலாம்னு சொல்லுங்க...''

''இப்ப என்ன பிரச்னை... ஒரு வாரமா அந்த ஆள் சைலன்ட் ஆயிட்டான் இல்லையா...?''

'' **'உன்னால என்ன பண்ண முடியும்?'ன்னு அன்னிக்கு நான் கோபத்தோட கேட்டுட்டேன்... 'சொல்லிட்டு செய்ய மாட்டேன்... செஞ்சு காட்டறேன்'**னு சொன்னான்... அதனால இந்த அமைதிக்குப் பின்னால ஏதோ ஒரு புயல் இருக்குன்னு எனக்கு நல்லாத் தெரியுது...''

தாமினி பின்சீட்டில் அமர - டிரைவிங் இருக்கையை ஆக்ரமித்தபடியே அவன் சொன்னான்.

''போலீஸ்ல, ப்ரொட்டெக்ஷன் கேட்டு ஒரு லெட்டர் எழுதிக் குடுக்கலாமா மேடம்...?''

கார் நகர ஆரம்பித்தது.

''அதெல்லாம் வேஸ்ட் சத்தியமூர்த்தி...''

''ஏன் அப்படிச் சொல்றிங்க...?''

''தன்னிச்சையா செயல்படக் கூடிய பத்திரிகைகளே அவரோட அடக்குமுறைக்கு பலியாகறப்போ அவங்க கட்டுப்பாட்டில் இருக்கற போலீஸ், நமக்கு ஃபேவரா இருப்பாங்கன்னா நினைக்கறிங்க...?''

தாமினியின் கேள்விக்கு பதில் சொல்ல



முடியாமல் அமைதியாகிப் போனான் சத்தியமூர்த்தி.

இருள் கவிழ்ந்த புறநகர்ச் சாலைகளில் டயர்களைத் தேய்க்க ஆரம்பித்தது கார்.

சட்டென கார் தாறுமாறாய் ஓட ஆரம்பித்தது.

''என்னாச்சு சத்தியமூர்த்தி...?''

ஸ்டியரிங்கைக் கரகரவென வளைத்துக் காரை ஓரங்கட்டி நிறுத்தினான்.

''வீல் பஞ்ச்சர்னு நினைக்கிறேன்...''

இஞ்சினை அணைத்து விட்டு கதவை விரித்தான்.

தாமினியும் கீழே இறங்கினாள்.

சத்தியமூர்த்தி டாஷ்போர்டிலிருந்த பென் டார்ச்சை உயிர்ப்பித்தான்.

அதன் சின்ன வட்டத்தை, அசையவிட்டபடி ஒவ்வொரு டயராகக் குனிந்து பார்த்துக் கொண்டே வந்தான்.

பின்பக்கம், இடது பக்க டயர், சப்பழிந்து போய்த் தரையோடு தரையாய் ஒட்டியிருந்தது.

''இந்த வீல் பஞ்ச்சர் ஆயிருக்கு...''

''ஸ்டெப்னி இருக்கா...?''

''இருக்கு மேடம்... ஸ்டெப்னியை செக் பண்ணாம நான் லாங் ஜர்னி கிளம்பமாட்டேன்...''

சொல்லிக் கொண்டே டிக்கி கதவை விரித்தான்.

உள்ளே சென்ட்டர் போல்ட்டின் பிடியில் உட்கார்ந்திருந்த ஸ்டெப்னியை விடுவித்தான்.

அதைக் கையிலெடுத்தபோது, அவன் முகம் கணிசமாய் மாறிப் போயிருந்தது.

மெல்லிய நிலா வெளிச்சத்தில் அவன் முக மாற்றத்தை கவனித்தவளாய்க் கேட்டாள்.

''என்னாச்சு...?''

''ஸ்டெப்னி வீலும் பஞ்ச்சராயிருக்கு மேடம்...''

''செக் பண்ணிட்டுத்தான் கிளம்புவேன்னு கொஞ்சம் முன்னாடி சொன்னிங்களே...?''

''காலைல கிளம்பறப்ப செக் பண்ணினேன் மேடம்...''

''அப்போ சரியாயிருந்ததா...?''

''ஹேண்டி ஏர் ப்ரஷர் கேஜ் வெச்சு ப்ரஷர் செக் பண்ணினேன்... சரியாயிருந்தது...''

''அசம்பாவிதமா ஆணி பட்டு இந்த வீல் பஞ்ச்சர் ஆயிருக்கலாம்... ஆனா, டிக்கிக்குள்ளே இருக்கற ஸ்டெப்னி வீல் எப்படி பஞ்ச்சர் ஆகும்...?''

''அதைத்தான் நானும் யோசிக்கறேன்...''

''யாரோ வேணுமின்னே இதைச் செஞ்சிருக்காங்க...''

''அப்படித்தான் இருக்கணும் மேடம்...''

''டிக்கியைப் பூட்டியிருந்திங்களா?''

''பூட்டியிருந்தேன்.''

பதட்டம் ஊடுருவிய குரலில் கேட்டாள் தாமினி.

''பூட்டியிருந்த டிக்கியைத் திறந்து டயரை எப்படி பஞ்ச்சர் பண்ண முடியும்?''

''கள்ளச் சாவி போட்டுத் திறந்திருக்கலாம்...''

''இப்போ என்ன பண்ணறது...?''

''இந்த வழியா போற யார் கிட்டேயாவது லிஃப்ட் கேட்டுப் பார்க்கலாம். நீங்க பங்களாவுக்குப் போயிடுங்க. நான் காரை சரி பண்ணிக் கொண்டு வந்துடறேன்.''

நெடுஞ்சாலை இருட்டில் காத்திருந்தார்கள்.

காற்று விய்ய்விய்ய்யென்று சுழற்றியடித்தது.

வெகு நேரத்திற்கப்புறம் தொலைவில் இரண்டு ஹெட்லைட் வெளிச்சப் புள்ளிகள்



உற்பத்தியாகின.

அவை நெருங்கி வர ஆரம்பிக்க -

சத்தியமூர்த்தி கிட்டத்தட்ட சாலை மையத்திற்கு வந்து கைகளை அசைத்தான்.

வந்த வாகனம் வேகம் குறைய ஆரம்பித்தது.

அவர்களருகே வந்து ஓய்ந்தது.

சத்தியமூர்த்தி கார் ஜன்னலருகே குனிந்தான்.

''வீல் பஞ்ச்சர் ஆயிடுச்சு. சிட்டி வரைக்கும் லிஃப்ட் தர முடியுமா?''

காரின் டிரைவிங் இருக்கையிலிருந்து இறங்கியவனைப் பார்த்து அதிர்ந்தாள் தாமினி.

சிரிப்போடு கீழே இறங்கினான் தர்மா.

அவனைத் தொடர்ந்து நாலாபுறமும் கதவுகளை இறக்கை விரித்துக் கொண்டு மேலும் நாலைந்து முரட்டு ஆட்கள் காரை விட்டுக் குதித்தார்கள்.

தர்மா அவளை நெருங்கி வந்து தன் முரட்டுக் கைகளால் அவள் கையைப் பற்றினான்.

கோபத்தோடு சத்தியமூர்த்தி குறுக்கே வந்தான்.

''கையை விடுங்கடா...''

தர்மாவின் கூட வந்த ஆட்கள் அவனைச் சுற்றி வளைத்து கையை முறுக்கி அசைய விடாமல் நிறுத்தினார்கள்.

தர்மா அவனைப் பார்த்து உறுமினான்.

''ரொம்ப சீறாதே... உன்னை இங்கேயே கூறு போட்டுட்டுப் போயிடுவோம்...''

உதறிக் கொள்ள முயலும் தாமினியை முரட்டுத் தனமாய்க் காருக்குள் இழுத்துச் சென்றான்.

பின் சீட்டில் அவளைத் தள்ளினான்.

சத்தியமூர்த்தியை வேகமாய்க் கீழே தள்ளி விட்டு அந்த ஆட்கள் காருக்குள் தாவினார்கள்.

கதவுகள் பட்பட்டென்று அடைபட்டு கார் தாமினியைச் சுமந்து கொண்டு அங்கிருந்து ஜெட்தனமாய்ச் சீற ஆரம்பித்தது.

---

# 9

---

சத்தியமூர்த்தி பதைபதைத்துப் போய் நின்றிருந்தான்.

இருட்டான நெடுஞ்சாலையில் வாகனங்கள் நிற்காமல் பேய்த்தனமான வேகத்தில் சென்றன.

அவன் கையசைத்ததைப் பொருட்படுத்தாமல் இரண்டொரு வேன்கள் நழுவிச் சென்றன.

சரியாய்ப் பத்து நிமிஷக் கழிதலுக்குப் பின் மோட்டார் சைக்கிளில் செல்லும் ஸேல்ஸ் ரெப்ரசென்ட்டேட்டிவ் ஒருவர் வேகத்தைக் குறைத்து அவனருகே பிரேக் அடித்து நிறுத்தினார்.

''கார் பஞ்ச்சர் ஆயிடுச்சு... சிட்டில என்னை டிராப் பண்ணிடறிங்களா...?''

அவனுடைய பதட்டமான முகத்தையும் காரையும் பார்த்தவர் தலையசைத்தார்.

''உக்காருங்க...''

காரைப் பூட்டிக் கொண்டு அவருடைய பைக் பில்லியனில் தொற்றிக் கொண்டான்.

ஆக்சிலேட்டரை முறுக்கிக் கொண்டே அவர் கேட்டார்.

''பதட்டமா இருக்கிங்களே... எனி ப்ராப்ளம்...?''

''நடிகை தாமினியோட மேனேஜர் நான்...'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு நடந்ததைச் சொன்னான் சத்தியமூர்த்தி.



அவர் திகைப்பை வெளியிட்டார்.

''தாமினியை ரவுடிகள் கடத்திட்டுப் போயிட்டாங்களா...?''

''ஆமா... கடத்தினவங்க அமைச்சர் திருச்சிற்றம்பலத்தின் ஆட்கள்...''

''நம்பவே முடியலை... இவ்வளவு பிரபல நடிகையை இப்படி பப்ளிக்கா கடத்தறதுக்கு துணிவாங்களா...?''

''பிரபலமா இருக்கறதுதான் அவங்களோட பிரச்சனைக்கே காரணம். அமைச்சரோட வற்புறுத்தலுக்கு இணங்காததால் பலாத்காரத்தில் இறங்கிட்டார் திருச்சிற்றம்பலம்...''

''இப்ப என்ன பண்ணப் போறிங்க...?''

''போலீஸ்ல கம்ப்ளைண்ட் தரப் போறேன்... ஆனா போலீஸ்... எந்த அளவுக்கு ஆக்ஷன் எடுப்பாங்கன்னு எனக்குத் தெரியலை...''

கவலையோடு நெற்றியைக் கீறினான் சத்தியமூர்த்தி.

சில்லிடும் காற்றைக் கிழித்துக் கொண்டு இருபது நிமிஷப் பயணம்.

சிட்டி போலீஸ் ஸ்டேஷனில் அவனை இறக்கி விட்டுச் சென்றார் அந்த ஸேல்ஸ் ரெப்ரசன்ட்டேட்டிவ்.

ஸ்டேஷனுக்குள் வேகமாகப் பிரவேசித்தான் சத்தியமூர்த்தி.

டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் அவனை உட்காரச் சொல்லிக் கையசைத்து விட்டு, தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

சில விநாடிகளில் ரிசீவரைச் சாத்திவிட்டு நிமிர்ந்தார்.

''என்ன வேணும்...?''

தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு

நெடுஞ்சாலை நடுவே நடந்த அசம்பா விதத்தை விவரித்தான்.

பொறுமையாய் அவன் சொல்பவைகளைக் காதில் வாங்கிய இன்ஸ்பெக்டர் குரலை வெளியிட்டார்.

''எத்தனை பேர் வந்தாங்க...?''

''அஞ்சு பேர் இன்ஸ்பெக்டர்...''

''வந்தவங்க அமைச்சரோட ஆட்கள்ன்னு எதைவெச்சு சொல்றிங்க...?''

''அமைச்சரோட கார் டிரைவர் தர்மா தான் காரை ஓட்டிட்டு வந்தான்... மத்த ஆட்கள் என்னை மடக்கிப் பிடிச்சிக் கிட்டாங்க... அவன் தாமினி மேடத்தைக் கையைப் முறுக்கிக் காரில் தள்ளினான்... என்னை ஓரமாத் தள்ளிட்டு மேடத்தோட, காரில் பறந்துட்டாங்க...''

''என்ன கார்...?''

''அம்பாஸிடர்...''

''அமைச்சர் டாட்டா சுமோதானே வெச்சிருக்கார்...?''

''தெரியலை இன்ஸ்பெக்டர்... அவங்க வந்தது அம்பாஸிடர் காரில்தான்...''

''என்ன கலர்.?''

''கறுப்பு கலர் கார்...''

''பெரிய இடத்து விவகாரம்... எடுத்தோம் கவிழ்த்தோம்ன்னு ஆக்ஷன் எடுக்க முடியாது...''

''தாமினி மேடத்தை வலுக்கட்டாயமா கடத்திட்டுப் போயிருக்காங்க... அநேகமா அமைச்சரோட கெஸ்ட் ஹவுசுக்குத்தான் கடத்திட்டுப் போயிருக்கணும்... நீங்க உடனே வந்து அவங்களை மீட்க உதவணும்... காலம் கடந்த நடவடிக்கையால எந்த பிரயோஜனமும் இல்லை... நடந்ததை எழுதித்தர நான் தயாரா இருக்கேன்... எந்த கோர்ட்டுல வேணாலும் சொல்லத் தயாரா இருக்கேன்...''



'அதெல்லாம் நீங்க செய்வீங்க... மேலதிகாரி பிட்டு அர்ச்சனை பண்ணினா, நான்தான் ங்கிக் கட்டிக்கணும். ஒரு செகண்ட் இருங்க... ன் போட்டு விசாரிக்கலாம்...''

சொல்லிக் கொண்டே டெலிபோன் டயலைச் ற்றினார் இன்ஸ்பெக்டர்.

மறுமுனையில் ரிங் போனதும் பவ்யமான லில் பேசினார்.

''நான் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் முத்துராமன் சறேன். மினிஸ்டரய்யா வீட்டில் க்காங்களா...?''

''ஹோல்டிங்...'' என்று பதில் வர -

இன்னும் பவ்யமாகிக் கொண்டார் ன்ஸ்பெக்டர்.

''அய்யா! இங்க ஒருத்தர் ஸ்டேஷன் ரைக்கும் வந்து சின்னப் பிரச்சனை ழப்பியிருக்கார்... உங்களைப் பத்தி புகார் ன்ன வந்திருக்கார்...''

''என்னைப் பத்தியா...? யாரது...?''

''நடிகை தாமினியோட மேனேஜர்...''

''என் மேல என்ன புகார்...?''

''உங்க ஆட்கள் தாமினியைக் கொஞ்ச ரத்துக்கு முன்னால ஃபோர்ஸ் பண்ணிக் டத்திட்டுப் போயிட்டாங்களாம்... 'புகார் ழுதித் தர்றேன். நடவடிக்கை எடுங்க'ன்னு ால்றார்.''

''என்ன இது அநியாயமா இருக்கு... என்னோட ட்கள் தான் கடத்தினாங்கன்னு எதை வெச்சு ால்றார்...?''

''உங்க கார் டிரைவர் தர்மா, சில ஆட்களோட ந்து தாமினியை பலாத்காரமா இழுத்துட்டுப் ானாங்களாம்...''

''அடக்கடவுளே... தர்மா இதோ இங்கேதான் யந்தரத்திலிருந்து இருக்கான்... அந்தப்

பொண்ணு தாமினி தீர்மானம் பண்ணிகி
என் மேல ஏதாவது வகைல அவ
கிளப்பணும்ன்னு, ஒவ்வொரு காரிய
பண்ணிக் கிட்டிருக்கு... பத்திரிகைல பே
தா்றேன்னு சொல்லி பிரஸ்காரங்கள
கூப்பிட்டிருக்கு... நல்லவேளை
ஆதாரமில்லாத செய்திகளை வெளி
அவங்க ஒத்துக்கலை... இப்போ வேற வழி
முயற்சி பண்ணப் பார்க்குது... ஒருவே
எதிர்க்கட்சிக்காரங்க தூண்டுதல்ல இப்ப
செய்யுதோ என்னவோ தெரியலை... நீ
இங்கேயே வந்து வேணாலும் விசாரிச்சிட்
போகலாம்... சாயந்தரத்திலிருந்து த
இங்கேயேதான் இருக்கான்...''

''அய்யய்யோ... ஒரு சம்பிரதாயத்துக்
கேட்டேன்ங்கய்யா... நீங்க சொன்னா மே
பேசறதுக்கு என்ன இருக்கு...''

ரிசீவரை வைத்தார் இன்ஸ்பெக்டர்.

சத்தியமூர்த்தி சிவந்துபோன முகத்தே
அவரைப் பார்த்தான்.

''இன்ஸ்பெக்டர்...! திருடினியான்
திருடன்கிட்டேயே "கேட்டா ஆமான்
ஒத்துக்குவானா?''

''இங்கே பாருங்க... நீங்க நடி
தாமினியோட மேனேஜர்ங்கறதால, இவ்வ
தூரம் அமைச்சர் வீட்டுக்கே டயல் பண்
விசாரிச்சேன்... இதே வேற மினிஸ்டரா இருந்
இப்படி போன் பண்ணிக் கேட்டதுக்
என்னைத் தண்ணியில்லாத காட்டு
விரட்டியிருப்பாங்க... இவர் நல்லவரா இருக்
போய், பொறுமையா பதில் சொன்னார். நீ
சம்பவத்தை அமைச்சர் பேரை இழுக்க
பொதுவா எழுதிக் கொடுங்க... நான் விசாரிச்
பார்க்கறேன்...''

''இன்ஸ்பெக்டர்...?''



''சும்மா கத்தாதிங்க... அப்புறம் அவதூறு
...டத்தின் கீழே உங்களை உள்ளே
...ளிடுவேன்... நடந்த சம்பவத்தை நேரில்
...த்த சாட்சி யாராவது இருக்காங்களா...?''

''ஹைவேஸ் ரோட்டில் இருட்டான ஒரு
...த்தில் இந்த சம்பவம் நடத்திருக்கு... அங்கே
...ருமே இல்லை...''

''நீங்களும், நடிகை தாமினியும் சேர்ந்து
...பனையா ஒரு சம்பவத்தைச் சொல்றதா
...மைச்சர் சொல்றார். இதுக்கு என்ன
...ல்றீங்க...?''

...கோபத்தோடு இன்ஸ்பெக்டரும் குரலை
...ர்த்தின போது,

...டெலிபோன் ஒலித்தது.

...ரிசீவரைக் காதோரம் உரசவிட்டு, 'ஹலோ...'
...றார் இன்ஸ்பெக்டர்.

...மறுமுனையிலிருந்து பெண் குரல் கேட்டது.

''நான்... நடிகை தாமினி பேசறேன்...''

---

## 10

---

சத்தியமூர்த்தி ஆட்டோவினின்றும்
...ங்கினான்.

...காசைக் கொடுத்து ஆட்டோவை
...னுப்பிவிட்டு அகல வாசல் கதவினுள்
...கமாய் நுழைந்தான்.

...போர்டிகோவைக் கடந்து ஹாலுக்குள் செல்ல
...சோபாவில் தாமினி அமர்ந்திருந்தாள்.

''மேடம்...' உங்களுக்கு ஒண்ணும்
...கலையே...?''

...கற்சிலை மாதிரி இறுக்கமாய் உட்கார்ந்திருந்த
...மினி இடவலமாய் தலையசைத்து மெல்லிய

குரலில் சொன்னாள்.
''அவங்க என்னை எங்கேயும் கடத்திட்
போகலை. வீட்டில் கொண்டு வந்து இற
விட்டுட்டுப் போயிட்டாங்க.''
சொன்னவளை நெற்றி நிை
குழப்பத்தோடு பார்த்தான் சத்தியமூர்த்தி.
''அவங்க நோக்கம் என்ன...?''
''அது புரியாமத்தான் நான் குழப்ப
இருந்தேன். அவங்க போன கொஞ்ச நேரத்
போன் வந்தது...''
''திருச்சிற்றம்பலம் கிட்டே இருந்தா...?''
''ஆமா...''
''என்னன்னு...?''
''அவர் நினைச்சா பலாத்காரமா என்னை
கடத்திட்டுப் போய் எதுவும் செய்ய முடியும்ன்
காட்டத்தான் இப்படிப் பண்ணியிருக்கா
இன்னும் இருபத்தி நாலு மணி நேரம் ட
குடுத்திருக்கார்... அதுக்குள்ளே நா
அவர்கிட்டே போகணுமாம்... இல்லைன்
விபரீதமா இருக்கும்ன்னு எச்சரிக்
செஞ்சிருக்கார்...''
''இதை அப்படியே போலீசில் புகார் செஞ்
என்ன மேடம்.? "அதைச் செய்ய
ஸ்டேஷனுக்குப் போன் பண்ணி என்னை
வீட்டுக்கே திரும்பி வரச் சொல்லிட்டிங்க...?''
''நாம சொல்றதை போலீஸ் நம்ப மாட்டா
சத்தியமூர்த்தி...''
''நாம பெரிய லெவல்ல விஷயத்தை
கொண்டு போகலாம்.''
''எல்லா லெவல்களிலும், பொம்பளைச்
விரோதமா நடந்துக்கறவங்க தான் நிறையப்
இருப்பாங்க... கடைசியில் நாமதா
அவமானப்பட வேண்டியிருக்கும்...''
''ஒண்ணுமே செய்யாம இருந்தா அவரோ



ராஜகத்தை எப்படி சமாளிக்க முடியும்...?''
சில விநாடிகள் மவுனம் காத்த தாமினி,
ச்சைத் தொடர்ந்தாள்.
''நான் ஒரு தீர்மானத்துக்கு வந்திருக்கேன்...''
''என்ன தீர்மானம்...?''
''ரெண்டு மாசத்துக்கு என்னோட அத்தனை
ஷட்யூலையும் கேன்சல் பண்ணுங்க...''
திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான்.
''மே... மேடம்... என்ன சொல்லுறிங்க...?''
''இது ரொம்ப சீரியசான விஷயம்... நல்லா
யாசிச்சித்தான் தீர்வுகாண முடியும்...
ங்கிருந்தா யோசிக்கறதுக்குள்ளே அந்த ஆள்
ன்னை என்ன வேணா செஞ்சிடுவான்...
தனால கால்ஷீட்டையெல்லாம் கேன்சல்
ண்ணிட்டு, ரெண்டு மாசம் கண்காணாத
டத்துக்குப் போக விரும்பறேன்... திரும்பி
றப்ப தீர்வோட வருவேன்...''
ஜக்கிலிருந்த தண்ணீரை ஒரு மிடறு
முங்கிவிட்டுச் சொன்னாள்.
''யார் கேட்டாலும் உடல்நிலை
ரியில்லாததால ஓய்வெடுக்க போயிருக்கேன்னு
ட்டும் சொல்லுங்க... நான் எங்கே
ருக்கேன்ங்கறதை ரகசியமா வெச்சிக்க
வண்டியது உங்க பொறுப்பு...''
''எங்கே போறதா இருக்கிங்க...?''
''கர்நாடகாவில் ஒரு ஹில் ஸ்டேஷனுக்கு...''
''அங்கே போய் ரெண்டு மாசம் இருந்தா...
ரச்சனை தீர்ந்துடுமா...?''
''பரபரப்பு, டென்ஷன் இதெல்லாம் இல்லாத
மைதியான சூழலில் இருந்தோம்ன்னா
வ்வளவு பெரிய பிரச்சனையையும்,
னிக்கட்டியா கரைச்சிடக்கூடிய யோசனைகள்
டைக்கும்... நாளைக்கு விடிகாலைல நான்
ங்கே இருக்க மாட்டேன்... என்னை 'புக்'

பண்ணியிருக்கும் ப்ரொட்யூசர்
டைரக்டர்களை மட்டும் சமாளிச்சிக்கங்க..."

சொல்லிவிட்டு மாடிப்படிகளை நோக்
செல்ல ஆரம்பித்தாள் தாமினி...

---

# 11

---

மறுநாள் சாயந்தரம்.

ஏழு மணி.

கெஸ்ட் ஹவுஸ் பங்களாவின் நீச்சல் குளத்
இருந்து மாமிச மலையாய் மேலே வந்
திருச்சிற்றம்பலம். டர்க்கி டவலால் தலை
துவட்டிக் கொண்டே கூப்பிட்டார்.

"தர்மா..."

முகப்புக் கதவருகே கையைக் கட
நின்றிருந்த தர்மா ஓடி வந்தான்.

"அய்யா...?"

"தாமினிகிட்டே இருந்து போன் வந்துச்சா...

"இல்லைங்க... இதுவரைக்கும் வரலை..."

"எவளுமே என்னை இவ்வளவு தூ
அலைய வெச்சதுமில்லை... பி
பண்ணிக்கிட்டதும் இல்லை... இவளுக்கு என்
திமிர்... என்ன அலட்சியம்..."

"மயிலே மயிலே இறகு போடுன்
போடாதுங்கய்யா! அன்னிக்கு அவளை வீட்
கொண்டு போய் விடாம, நேரா இங்கே கொண்
வந்திருக்கணும்... அவளால் என்ன செஞ்சிரு
முடியும்...? காரியத்தை முடிச்சிட்டு அப்புற
வீட்டில் கொண்டு போய் விட்டிருக்கணும்..."

"பொம்பளைங்க விஷயத்துல எனக்கு
பலாத்காரம் பிடிக்காதுடா. நம்ம பவரைக் கா
பயமுறுத்தலாம் ஆனா அவ தானாக



த்துழைக்கணும்..."

"இவதான் இவ்வளவு தூரம் முரண்டு
டிக்கறாளே..."

"பார்க்கலாம். நேத்திக்கு குடுத்த அதிர்ச்சி
வைத்தியத்திலேயே ஆடிப்போயிருப்பா. 'இந்த
ள் சும்மா விடமாட்டான். ஒரு தடவை
டன்பட்டா தொல்லை விட்டுடும்'ன்னு. அவ
னசில் இந்நேரம் எண்ணம் எழுந்திருக்கும்."

"அப்படி எண்ணம் வந்திருந்தா இந்நேரம்
பான் பண்ணியிருப்பாளே.?"

"இவ்வளவு நாளா முரண்டு பிடிச்சிட்டே
ருந்தவ. திடீர்ன்னு இறங்கிவரத் தயக்கமா
ருக்கும். அவளுக்கு டயல் பண்ணு.
ன்னாச்சுன்னு கேளு."

தர்மா தலையசைத்து விட்டு, போன்
பொத்தான்களை அழுத்தினான்.

மறுமுனையில் ரிங் போய் ரிசீவர்
டுக்கப்பட்டு, 'ஹலோ' என்று
த்தியமூர்த்தியின் குரல் கேட்டது.

தர்மா திருச்சிற்றம்பலத்திடம் ரிசீவரை
டினான்.

"அய்யா, அவளோட மேனேஜர் பேசறான்."

அவர் அவனிடமிருந்து அதை வாங்கிக்
தோரம் வைத்தார்.

"தாமினி இல்லையா?"

"இல்லை. நீங்க யார் பேசறது?"

"தாமினியோட பர்சனல் லைனுக்கு போன்
ண்ணியிருக்கேன். அவளோட பெட்ரூம்
ரைக்கும் வந்து போனை எடுத்துப் பேசற நீ
ர்ன்னு முதல்ல சொல்லு."

ஒரு விநாடி யோசனையோடு மவுனித்த
த்தியமூர்த்தி அவர் யாரென்று யூகித்துக்
கொண்டு கேட்டான்.

"நீங்க மினிஸ்டர் திருச்சிற்றம்பலமா

பேசறது?''

''ஆமா. தாமினிகிட்டே ரிசீவரைக் குடு.''

''அவங்க வெளியூர் போயிருக்காங்க.''

''வெளியூரா? ஷூட்டிங்கா?''

''இல்லை. ரெஸ்ட் எடுக்கறதுக்கா போயிருக்காங்க.''

''எந்த ஊருக்குப் போயிருக்கா?''

''எனக்குத் தெரியாது.''

''மேனேஜர்! உனக்குத் தெரியாம அ எங்கேயும் போக மாட்டான்னு நினைக்கிறே அவ எங்கே போயிருக்கான்னு மரியாதைய சொல்லிடு.''

''உண்மையைச் சொல்லப் போன உங்களோட தொந்தரவையும், நீங்க த இடைஞ்சல்களையும் தாங்கிக்க முடியாமத்தா எங்கேயோ அவுட் ஸ்டேஷன் போயிட்டாங் அநாவசியமா இனி நீங்க போன் பண்ணி உ நேரத்தை வீணாக்க வேண்டாம்.''

திருச்சிற்றம்பலம் மேலும் ஏதோ சொல்ல அவன் லொட்டென்று ரிசீவரைச் சாத் தொடர்பைத் துண்டித்தான்.

கோபத்தில் சிவந்த முகத்தோடு நிமிர்ந்த அவர்.

கையைக் கட்டி நின்று அவர் பேசுவதற்கா காத்திருந்த தர்மா, அவரின் கோப முகத்தை பார்த்து விட்டு மெல்லக் கேட்டான்.

''அவ ஏதாவது அவமானப்படுத்தி பேசிட்டாளா அய்யா?''

''எங்கேயோ வெளியூர் ஓடி போயிட்டாளாம்.''

''வெளியூரா...? நமக்கு பயந்து ஓடிட்டாளா.?

''என்னவோ திட்டத்தோடதான் அ வெளியூர் போயிருக்கணும். அவ எங்கே போ



ஒளிஞ்சிகிட்டாலும் சரி அவளை விடக்கூடாது தர்மா.''

''நான் அவளைத் தேடிப் பிடிச்சி இழுத்துட்டு வர்றேங்கய்யா.''

''ஊஹூம். இவ்வளவு தூரம் திமிரோட நடந்துக்கறவ இனிமே என்னோட ஒத்துழைப்பான்னு எனக்குத் தோணலை. நான் ஆசைப்பட்ட பொருள் எதுவா இருந்தாலும், ஒரு தடவையாச்சும் என் கைக்கு வந்துட்டுப் போகணும். அப்படி இல்லைன்னா, அப்படி ஒரு பொருளே உலகத்துல இருக்கக் கூடாது. எங்கிருந்தாலும் அவளைத் தேடிக் கண்டு பிடிச்சு தீர்த்துக்கட்டிடு தர்மா.''

தர்மா தலையை ஆட்டினான்.

## 12

**க**டல் மட்டத்திலிருந்து ஏராளமான உயரத்தில் சிகரம் வைத்திருந்த ஹெமனகெண்டி.

பனிப்புகை குட்டிக் குட்டி மேகங்களாய் சுற்றுப்புறத்தில் வாக்கிங் போய்க் கொண்டிருந்தன.

திரும்பின பக்கமெல்லாம் மரங்களும் செடிகளும் பசேலென்று தரையைப் போர்த்தியிருந்தன.

அந்த மத்தியான வேளை ஒண்ணரை மணிக்குக்கூட சூரியன் தொண்ணூற்றைந்து சதவிகிதம் வடிகட்டப்பட்டு லேசாய் இருள் கவிழ்ந்த மாதிரி உணர்வு.

சரிந்த மலைப் பாதையில் பொதுவாக ஆள் நடமாட்டத்தைப் பார்க்க முடியவில்லை.

அவ்வப்போது உயர் ஜாதி கார்கள் மட்டும், முழுவதும் ஏற்றப்பட்ட குளிர் கண்ணாடிகளோடு வெண்ணெய்த் துண்டுகளாய் வழுக்கிச் சென்றன.

அடர்ந்த செடிகளுக்குப் பின்னால் கிசுகிசுப்பாய்ப் பேச்சொலிகள் கேட்டன. உற்றுப் பார்த்தால் மெய்மறந்த ஜோடிகளைப் பார்க்க முடிந்தது.

அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலின் வாயிலருகே இருந்த பீடா ஸ்டாலுக்குப் பக்கத்தில் நின்றிருந்தான் தர்மா.

தலையைச் சுற்றி மப்ளரைக் கொடுத்திருந்தான். பிஸ்கட் நிறத்தில் ஸ்வெட்டர் அணிந்திருந்தான்.

நான்கு மணி நேரங்களாய் அங்கே காத்திருந்ததில் கிட்டத்தட்ட மூன்று பாக்கெட் ஃபில்டர் வில்ஸ்களை சாம்பலாக்கி உதிர்த்திருந்தான்.

அந்த விநாடி சட்டெனப் பரபரப்பானான்.

ரத்த நிற மாருதி சரேலென்று ஓட்டலுக்குள் பிரவேசமானது.

போர்டிகோ அருகே இருந்த கார் பார்க்கிங்கைத் தஞ்சமடைந்த அந்தக் காருக்குள்ளிருந்து கீழே இறங்கினாள் தாமினி.

போர்டிகோ படிகளில் வேகமாய்த் தடதடத்து உள்ளே சென்று மறைந்தாள்.

அவள் கண்களை விட்டு அகலும் வரை பார்த்துக் கொண்டு நின்றிருந்த தர்மா, சிகரெட்டைக் காலில் தேய்த்து விட்டு வேகமாய் எதிர்சாரி டெலிபோன் பூத்துக்குப் போனான்.

உள்வாங்கியிருந்த டெலிபோன் கூண்டுக்குள் நுழைந்து எண்களைச் சுழற்றினான்.

சில விநாடிகள் 'பீப்' சத்தங்கள் கேட்டன.



அதைத் தொடர்ந்து திருச்சிற்றம்பலத்தின் குரல்.

''ஹலோ...''

''அய்யா... நான் தர்மா பேசறேன்...''

''சொல்லுடா... எங்கிருந்து பேசறே?''

''கர்நாடகா!''

''கர்நாடகாவா?''

''ஆமாங்கய்யா... இங்கே ஹெமனகெண்டின்னு ஒரு மலைப் பிரதேசம். இங்கேதான் தாமினி இருக்கா.''

''நமக்குக் கல்தா கொடுத்துட்டு அவ போய்ப் பதுங்கிகிட்ட இடத்தை எப்படிக் கண்டுபிடிச்சே?''

''அந்த மேனேஜர் பயலை மிரட்டினேன்... அவன் வாயைத் திறக்க மாட்டேன்னுட்டான். நீ வாயைத் தொறந்து சொல்லலைன்னா கண்டுபிடிக்க முடியாதான்னு அவனை ஓரமாத் தள்ளிட்டு, தாமினி வீட்டைப் புரட்டிப் போட்டேன்... டிராவல் ஏஜன்சி கார்டு கிடைச்சது... அங்கே போய் விசாரிக்கற முறையில விசாரிச்சேன்... அவ ஹெமன கெண்டி போயிருக்கான்னு க்ளு கிடைச்சது... உங்ககிட்டே சொல்லாம்னு பார்த்தா, நீங்க மாநில மாநாட்டுக்குப் போயிட்டிங்க. அதான் நான் கிளம்பி வந்துட்டேன்... இங்கே ரெண்டே ரெண்டு ஸ்டார் ஹோட்டல் இருக்கு... அதில் ஏதாவது ஒரு ஹோட்டலில்தான் தாமினி தங்கியிருப்பாள்ன்னு முடிவு பண்ணி... ரெண்டு ஹோட்டலையும் வாட்ச் பண்ணினேன்... கடைசியா இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னால் அவளைப் பார்த்துட்டேன்... அவ தங்கியிருக்கற ஹோட்டலுக்கு எதிர்ல இருந்துதான் உங்ககிட்டே பேசிட்டிருக்கேன்.''

''அது டூரிஸ்ட் ஸ்பாட்டா தர்மா?''

''டூரிஸ்ட் ஸ்பாட்தான்... ஆனா அவ்வளவா போக்குவரத்து வசதி இல்லாத இடம்... மொத்தமாவே ரெண்டே ட்ரிப்தான் பஸ் வருது... அதனால கார் வெச்சிருக்கற பணக்காரங்கதான் இங்கே இருக்காங்க... பெரும்பாலும் தேனிலவு தம்பதிகள்... அவ்வளவா நடமாட்டங்களே இருக்காது.''

''அப்படின்னா உன்னால அங்கே சுலப்மா அவளைத் தீர்த்துக்கட்ட முடியும்னு நினைக்கறேன்...''

''முடியும்... ஒரு ப்ளான் போட்டு வெச்சிருக்கேன்...''

''அந்த ஹோட்டல் பாதுகாப்பெல்லாம் எப்படி...?''

''பேருக்கு செக்யூரிட்டிகள் முன்னாடி இருக்காங்க... பின்பக்கம் அவ்வளவா கவனிப்பு இல்லை... ஓட்டல் ஸ்டாஃப்கள் போறதுக்காக பின்பக்கம் படிக்கட்டு இருக்கு... அந்தப் படிக்கட்டு திரும்புற இடத்தில் சின்னதா லேண்டிங்... அந்த லேண்டிங்கிலிருந்து ஒரு சின்னத் தாவலில் தாமினி தங்கியிருக்கிற அறையின் சிட் அவுட்டுக்குப் போயிடலாம்... சிட் அவுட்டிலிருந்து ரூமுக்குப் போறது சுலபம்...''

''சரி... சரி... போன்ல விலாவாரியா பேசிட்டிருக்க வேண்டாம்... காரியத்தை முடிச்சிட்டு ஊர் வந்து சேரு. மத்ததை நேரில் பேசிக்கலாம்...''

தர்மா தலையாட்டி விட்டு ரிசீவரைச் சாத்தினான்.

முன்பக்கம் மேஜையில் வைத்திருந்த பில்லிங் இயந்திரம் அந்த ஆண்டின் மிகப்பெரிய ஜோக்கைக் கேட்டது போல கடகடவென சிரித்தபடி ஒரு பில் காகிதத்தைத் துப்பியது.

விபரங்கள் கன்னடத்தில் வந்தன.



காசைக் கொடுத்து விட்டு வெளியே வந்தான் தர்மா.

ஐந்து நிமிஷ நடையில் அவன் தங்கியிருந்த காட்டேஜைத் தொட்டான்.

குறுகலான அறையை அடைத்துக் கொண்டு கட்டில் போடப்பட்டிருந்தது.

அதில் பொத்தென்று விழுந்தான்.

சில மணி நேரங்களுக்கு ஆழ்ந்த தூக்கம்.

ஐந்து மணிக்கெல்லாம் ஜன்னலுக்கு வெளியே இருட்டின் தடயங்கள் விழ ஆரம்பித்தன.

தர்மா குளித்திருந்தான்.

தோளில் மாட்டிக்கொள்ளும் வசதியுடனிருந்த கையடக்கப் பையின் ஜிப்பை விரித்து, உள்ளே வைத்திருந்த நைலான் கயிறு... பளபளக்கிற கத்தி... இன்னும் சில அவசர கால உபகரணங்களை சரி பார்த்துக் கொண்டான்.

காட்டேஜைப் பூட்டிக் கொண்டு தாமினி தங்கியிருக்கும் ஸ்டார் ஹோட்டலை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான்.

## 13

அந்த நட்சத்திர ஹோட்டலின் அகலமான வாயிற் கதவில் யாரையும் உறுத்தாமல் கேஷுவலாக நடந்து சென்றான் தர்மா.

மலைச்சரிவில் அமைந்திருந்த அந்த ஹோட்டல், கண்ணாடி முகங்களோடு சற்றே சரிவான கோணத்தில் நின்றிருந்தது.

பாத்தி கட்டியிருந்த க்ரோட்டன்ஸ் செடிகளுக்கு இடையே நடந்து போனான்.

போர்டிகோ நுழைவாயில்கள் இடப்புறம் இருக்க, வலது பக்கம் குறுகலாய்ச் சென்ற பக்கவாட்டு வழியில் நடந்தான்.

ஸ்டீல் ஸ்டோர்கேஸ் சற்று தொலைவில் தெரிந்தது.

வளைந்து நெளிந்து மேலேறிச் சென்றன படிக்கட்டுகள்.

புகை படர்ந்த சமையலறை நோக்கிப் போயின.

சிப்பந்திகள் பயன்படுத்தும் வழி என்று ஆங்கிலத்தில் போர்டு வைத்திருந்தது.

தர்மா அதை லட்சியம் பண்ணாமல் நிதானமாய் மேலேறினான்.

இரண்டு ப்ளோர்களைக் கடந்தால் சின்ன லேண்டிங் செவ்வகம்.

அதை ஒட்டினாற்போல் தாமினி தங்கியுள்ள அறையின் பின்பக்க சிட்அவுட்...

அந்த லேண்டிங்கை நோக்கி மேலேறிச் சென்றான்.

பத்துப் பதினைந்து படிகள் ஏறியிருப்பான்.

"யார் நீங்க...? என்ன வேணும்...?"

குரல் அவனை நிறுத்தியது.

கையில் சில்வர் ட்ரேயுடன் யூனிபாரம் அணிந்த சிப்பந்தி ஒருவன் பின்னால் தெரிந்தான்.

வேகமாய்ப் படிகளில் மேலேறி வந்து கொண்டிருந்தான்.

"இது கிச்சன் போற வழி... முன்னாடி போர்டிகோ வழியா போங்க..."

ஒரு விநாடி அமைதி காத்த தர்மா சமாளித்தான்.

"என்னோட நண்பரைப் பார்க்கத்தான் நான் போயிட்டிருக்கேன்... இங்கே கேட்டரிங்



இன்சார்ஜா இருக்கார்..."

"பேரு...?"

"பசவப்பா..."

தர்மா எதிர்பார்த்த மாதிரியே அவன் யோசித்தான்.

இவ்வளவு பெரிய நட்சத்திர ஹோட்டலில் நிறைய பேர் பணியாற்றிக் கொண்டிருக்க வேண்டும். புதிது புதிதாக ஆட்கள் சேர்வார்கள்.

தர்மா தொடர்ந்தான்.

"அவர் இங்கே சேர்ந்து ஒரு வாரம்தான் ஆகுது... இந்த வழியா மேல வரச் சொன்னார்..."

"அப்ப சரி... மேல போய்ப் பாருங்க..."

சொல்லிவிட்டு அவன் வேகமாய் தர்மாவைக் கடந்து படிகளேறிச் சென்றான்.

தர்மா நிதானமாய் அந்த லேண்டிங்கைத் தொட்டான்.

மேலும் கீழும் பார்த்தான்.

மெல்லிய வெளிச்சங்களோடு கிச்சனும் கீ... ழே... அரை இருட்டான தரைப் பகுதியும் தெரிந்தது.

அவன் நின்றிருந்த லேண்டிங் முழுவதும் இருட்டை வாங்கியிருந்தது.

ஆள் நடமாட்டங்களற்ற அந்த சில நிமிஷங்களைப் பயன்படுத்தி, சட்டென அங்கிருந்து ஒரு சின்னத்தாவலில் சிட் அவுட்டுக்கு இடம் பெயர்ந்தான்.

வெறுமனே சாத்தியிருந்த சிட் அவுட் கதவை மெல்லத் தள்ளினான்.

ரோஜா நிறத்தில் மெல்லிய நைட்கவுன் அணிந்திருந்த தாமினியின் கையில் ரிமோட் கண்ட்ரோல் இருக்க - கலர் டி.வி.யில் சானல்கள் மாறிக் கொண்டிருந்தன.

தோல் பையின் ஜிப்பை சத்தமில்லாமல் பிரித்து கத்தியை எடுத்துக் கொண்ட தர்மா -

முகத்தை கர்ச்சிப்பால் கட்டிக் கொண்டான்.

பின் தாமினியை நோக்கி அழுத்தமாய் மெல்ல நடை போட்டான்.

அவனுக்கும் தாமினிக்கும் இடையே இருந்த இடைவெளி கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்தது!

பத்தடி...

எட்டடி...

ஆறடி...

நான்கடி...

எவ்வளவோ ஜாக்கிரதையாய் நடந்து வந்தும் தர்மாவின் இடது கால் பெருவிரல் டீபாயை லேசாய் இடித்து விடவே -

தாமினி சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

கையில் கத்தியோடு நிற்கிற அவனைப் பார்த்ததும் சட்டென்று பின் வாங்கி - ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து குளியலறைக்குள் நுழைந்து, கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

தர்மா திடுக்கிட்டுப் போய் கதவைத் தள்ளிப் பார்த்து விட்டு - சிட் அவுட்டுக்கு வந்து, படிகளில் தாவி கீழே இறங்கி ஹோட்டலின் தளத்துக்கு வந்தான்.

காலியான ஆட்டோ ஒன்று காத்திருக்க - ஏறிக் கொண்டான்.

''எங்கே ஸார் போகணும்?''

''டவுன் ஸ்ட்ரீட்.''

ஆட்டோ வேகம் பிடித்துக் கொண்டு ரோட்டில் சீறியது.

பத்து நிமிஷ பயணம்.

டவுன் ஸ்ட்ரீட் வந்தது.

தர்மா இறங்கிக் கொண்டு காசைக் கொடுத்து அனுப்பி விட்டு, சாலையோரத்தில் இருந்த எஸ்.டி.டி. பூத்துக்குள் நுழைந்தான். கண்ணாடிக் 



கதவைச் சாத்திக் கொண்டு, டயலில் எண்களைத் தட்டி, சென்னையில் இருந்த திருச்சிற்றம்பலத்தைப் பிடித்தான்.

''அய்யா... நான் தர்மா பேசறேன்.''

''என்ன, காரியத்தை முடிச்சுட்டியா?''

''இல்லிங்கய்யா...''

''ஏன்...?''

''தப்பிச்சுட்டா...''

''எப்படி...?''

''என்னைப் பார்த்ததும் குளியலறைக்குள்ளே ஓடிப்போய்க் கதவைத் தாழ்ப்பாள் போட்டுகிட்டா... கதவை உடைச்சு உள்ளே போறது சாத்தியம் இல்லாததினால திரும்பி வந்துட்டேன்.''

''உன்னைப் பார்த்துட்டாளா?''

''சரியா பார்த்திருக்க மாட்டாள்ன்னு நினைக்கிறேன். என் மூஞ்சிக்கு கர்ச்சீப் கட்டியிருந்தேன்.''

''குளறுபடி பண்ணிட்டியே தர்மா.''

''அடுத்த சான்ஸ் இப்படியாகாது அய்யா! காரியத்தை கரெக்டா பண்ணி முடிச்சிடறேன்.''

''தர்மா...''

''அய்யா...''

''இனி நீ அந்த ஊர்ல இருக்கிறது ஆபத்து. தாமினி இந்நேரம் போலீஸுக்கு போயிருப்பா. கர்நாடகா போலீஸ் சும்மாயிருக்க மாட்டாங்க. நீ அவங்க கையில மாட்டிகிட்டா வம்பு. உடனே நீ சென்னை வந்து சேரு...''

''அய்யா! காரியம் முடிக்காமே எப்படி வர்றது?''

''நான் அதுக்கு வேற ஏற்பாடு பண்ணிக்கறேன்... நீ உடனே புறப்பட்டு சென்னை வந்து சேரு...''

''சரிங்கய்யா...''

''ஜாக்கிரதை! கர்நாடகா போலீஸ் கையில் மாட்டிக்காதே...''

''நீங்க கவலைப்படாதீங்கய்யா... பத்திரமா வந்து சேர்ந்துடுவேன்...''

## 14

தர்மா ரயிலைப் பிடித்து சென்னை வந்து சேர்ந்த போது காலை ஏழு மணி.

ஒரு ஆட்டோவைப் பிடித்து பதினைந்து நிமிஷ நேரம் பணம் செய்து, அமைச்சர் திருச்சிற்றம்பலத்தின் கெஸ்ட் ஹவுஸ் பங்களாவைத் தொட்டபோது, அவனுடைய புருவங்கள் அரைமில்லி மீட்டர் உயரத்துக்கு மேலேறின.

வாசலில் போலீஸ் ஜீப்.

பங்களாவின் போர்டிகோவிலும் மற்ற பகுதிகளிலும் காக்கி யூனிஃபார்ம்களின் நடமாட்டம் தெரிந்தது.

தர்மா மெதுவாய் தயங்கித் தயங்கி உள்ளே நடைபோட்டான். காவலுக்கு நின்றிருந்த கான்ஸ்டபிள் அவனை லாட்டியால் நிறுத்தினார்.

''ஏய்... யாரப்பா... நீ...?''

''நான் மினிஸ்டரோட பர்சனஸ் டிரைவர். இங்கே எதுக்காக இவ்வளவு போலீஸ்...?''

''பர்சனல் டிரைவர்ன்னு சொல்றே...? உனக்கு விஷயம் தெரியாதா...?''

''என்ன ஸார்...?''

''மினிஸ்டர் போயிட்டார்.''

''என்ன...?''



''செத்துப் போயிட்டார்...''

''செத்துட்டாரா...? எப்படி...?''

''எப்படின்னு கண்டுபிடிக்கத்தான் இத்தனை பேர் இப்ப அல்லாடிட்டிருக்கோம்... கொலையா தற்கொலையான்னு தெரியலை...''

''ஒன் நாட் டு... இன்ஸ்பெக்டர் இந்த ஆளைத்தான் தேடிட்டிருந்தார்... நீ அவன்கூட அரட்டையா அடிச்சிட்டிருக்கே...? ஆளைக் கொண்டு போய் மொதல்ல இன்ஸ்பெக்டர்கிட்டே நிறுத்து...''

''வாய்யா போகலாம்...''

உள்ளே நடந்தார்கள்.

பங்களாவின் பக்கவாட்டிலிருந்த நீச்சல் குளத்தை நோக்கிக் கான்ஸ்டபிள் கூட்டிப் போனார்.

குளத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த சிமெண்ட் திட்டின் மேல் நீளமாய்ப் படுக்க வைக்கப்பட்டிருந்தார் திருச்சிற்றம்பலம். அவர் மேல் போர்த்தப்பட்டிருந்த வெள்ளைத் துணி திட்டுத் திட்டாய் ஈரமாகிக் கிடந்தது.

டாக்டர் ஒருவர் துணியை விலக்கி பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

இன்ஸ்பெக்டர் முத்துராமன் சமையல்காரனிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்.

''நீ பார்க்கறப்ப உயிர் இருந்ததா...?''

''இல்லைங்க... குளத்துல அசையாம மிதத்துட்டிருந்தார். அதைப் பார்த்துட்டுத்தான் நான் போலீசுக்கு போன் பண்ணினேன்...''

''வீட்ல வேற யாரெல்லாம் இருக்காங்க...?''

''நான்... எனக்கு ஒத்தாசையா சமையல்காரப் பொண்ணு... தோட்டக்காரர்... அப்புறம் தர்மா...''

''தர்மாவா...?''

''அய்யாவோட டிரைவர். அவருக்கு வலது கை மாதிரி...''

''எங்கே அந்த தர்மா...?''

''வெளியூர் போயி நாலு நாளாச்சு...''

கான்ஸ்டபிள் குறுக்கிட்டார்,

''ஸார்... தர்மா வந்துட்டான் ஸார்...''

முத்துராமன் திரும்பினார்.

வந்து நின்றிருந்த தர்மாவை மேலிருந்து கீழே வரை அளந்தார். அவன் அதிர்ச்சியோடு லேசாய் கண் கலங்கிப் போயிருந்தான்.

''நீதானா அது... நாலு நாளா எங்கே போயிருந்தே...?''

''வெளியூர்...''

''எந்த ஊருக்கு...?''

''ஓசூர்...''

''எதுக்குப் போயிருந்தே...?''

''கட்சி வேலையா அய்யா என்னை அனுப்பியிருந்தார்... நேத்திக்கு சாயந்தரம் போன் பண்ணினப்ப என்னை திரும்பி வரச் சொன்னார்... இப்போ... இப்போ இப்படி பிணமாக் கிடப்பார்ன்னு நான் நினைக்கவேயில்லை...''

நிற்க முடியாமல் பக்கத்திலிருந்த தூணைப் பற்றிக் கொண்டான்.

''ரெண்டு மூணு வாரத்துக்கு முன்னால அமைச்சருக்கும் நடிகை தாமினிக்கும் தகராறு வந்தப்ப, தாமினியோட மேனேஜர் கம்ப்ளைண்ட் பண்ணினாரே... உன்னைத்தான் குறிப்பிட்டார்ன்னு நினைக்கறேன்...''

''ஆமாங்க... அய்யா சொன்னாரு...''

''தாமினிக்கும் அவருக்கும் என்ன தகராறு...?''

''ஒரு தகராறும் இல்லை... அய்யா பின்னேயும் அந்தப் பொண்ணுக்கு நல்லதுதான் செஞ்சாரு...



விருது கிடைக்க வழி பண்ணினாரு... ஆனா அந்தப் பொண்ணு நயவஞ்சகமா, இவர் பேரைக் கெடுக்க முயற்சி பண்ணிச்சு. சொல்லப் போனா அந்தப் பொண்ணு விஷயத்தில் அய்யா ஏமாந்துட்டார்ன்னுதான் சொல்லணும்...''

''இவருக்கு வேற பிரச்சனைகள் ஏதாவது இருந்ததா?''

''அமைச்சர்ன்னா பிரச்சனைகள் இருக்கத்தானே செய்யும்...''

''மனசை அழுத்தற அளவுக்கு பிரச்சனைகள் இருந்ததா? செத்து தண்ணிக்குள்ள மிதந்துட்டிருந்தார்... ஒரு வேளை தற்கொலையோன்னு சந்தேகம் இருக்கு.''

''தெரியலைங்க... அதைப் பத்தியெல்லாம் எனக்குத் தெரியலை...''

''அந்தப் பொண்ணு தாமினியோ அவளோட மேனேஜரோ இவரைக் குறி வைக்க முகாந்திரம் இருக்கா...?''

''இருக்கலாம். 'வேற கட்சிக்காரங்களோட சேர்ந்து அய்யாவுக்கு எதிரா சதி பண்றா அந்த தாமினி'ன்னுதான் அய்யா அடிக்கடி சொல்லிட்டிருந்தார்.''

திருச்சிற்றம்பலத்தின் உடலை ஆராய்ந்து கொண்டிருந்த டாக்டர் எழுந்து வந்தார்.

அவரைப் பார்த்ததும் இவனிடம், 'சரி... நீ ஓரமா நில்லு...' என்று சொல்லிவிட்டு டாக்டரிடம் திரும்பினார்.

''என்ன டாக்டர்... இது கொலையா தற்கொலையா...?''

''குழப்பமா இருக்கு...''

''குழப்பம் எதனால...?''

''குளிக்கறதுக்காக நீச்சல் குளத்தில் இறங்கினார்ன்னு தான் வேலைக்காரன் சொன்னான்... இவருக்கு நீச்சல் தெரியும்.

அதனால கையையோ காலையோ கட்டிக்கிட்டு குளத்தில் இறங்கித்தான் தற்கொலை செய்துக்க முடியும்..."

"அப்படின்னா இது கொலையா...?"

"கொலைன்னு தீர்மானிக்கக்கூடிய அடையாளங்களும் இல்லை... உடம்பில் எங்கேயும் அடிபட்ட காயம் இல்லை... தண்ணிக்குள்ளே யாராவது பலவந்தமா அமுக்கியிருந்தா அந்த அடையாளங்கள் கழுத்தில் தெரியும்... அப்படிப்பட்ட அடையாளங்களும் இல்லை..."

"அப்படின்னா கொலை நடந்த விதத்தில் ஏதோ மர்மம் இருக்கா...?"

"ஆமா... போஸ்ட்மார்ட்டம் பண்ணினா ஒருவேளை இந்த மர்மத்துக்கு விடை கிடைக்கலாம்..."

## 15

என்ஃபீல்ட் புல்லட்டை தாமினியின் பங்களாவுக்குள் நுழைத்தார் முத்துராமன்.

போர்டிகோவில் போய் தடதடப்பை நிறுத்தினார்.

சைடு ஸ்டாண்டில் அதை நிறுத்திவிட்டு படிகளில் ஏறினார்.

உள்ளே அரை வட்ட மேஜைக்குப் பின்னே சத்திய மூர்த்தி இருந்தான்.

அவரை அடையாளம் தெரிந்து கொண்டவனாய் 'வாங்க ஸார்...' என்றான்.

சோபாவைக் காட்டினான்.

முத்துராமன் அதில் உட்கார்ந்து கொண்டே கேட்டார்.



"தாமினியைப் பார்க்கணும்..."

"எதுக்காக...?"

"அவங்ககிட்டே விசாரிக்க வேண்டியிருக்கு..."

"என்ன விசாரணை...?"

"அமைச்சர் திருச்சிற்றம்பலம் மரணம் பத்தி உங்களுக்குத் தெரியாதா...?"

"பேப்பர்ல நியூஸ் பார்த்தேன்..."

"அது சம்பந்தமாத்தான் விசாரிக்கணும்... தாமினிக்கும் அவருக்கும் இடையில் ஏற்கெனவே தகராறு இருந்தது. இல்லையா...?"

"இன்ஸ்பெக்டர்... நீங்க மேடத்தைச் சந்தேகப்படறிங்களா...?"

"விசாரணையில் கிடைச்ச தகவல்கள், அவங்கமேலும் சந்தேகத்தைத் தூவியிருக்கு... விசாரிச்சு தெளிவுபடுத்திக்க வேண்டியது எங்க கடமை இல்லையா...?"

"அவங்க இப்போ ஊரில் இல்லை... வெளியூர் போய் கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆகப்போகுது..."

"வெளியூர் ஷூட்டிங்கா...?"

"இல்லை... ஷூட்டிங்கெல்லாம் கேன்சல் பண்ணிட்டு ரெஸ்ட் எடுக்கறதுக்காக ஹில் ஸ்டேஷன் போயிருக்காங்க..."

"எந்த ஹில் ஸ்டேஷன்...?"

"ஸாரி ஸார்... அவங்க அமைதியை விரும்பிப் போனாங்க... யாரோட தொந்தரவும் இல்லாம, சில நாட்களைக் கழிக்கறதுக்காக போயிருக்காங்க... அவங்க எங்கே இருக்காங்கன்னு எனக்குக்கூடத் தெரியாது..."

முத்துராமன் அவனை ஊடுருவலாய்ப் பார்த்தார்.

"அவங்க எங்கே போயிருக்காங்கன்னு எனக்குத் தெரியாதுன்னு நீங்க சொல்றது நம்பற

மாதிரி இல்லையே...?''

அவர் கேட்ட விநாடி -

முத்துராமனின் பாக்கெட்டிலிருந்த செல்லுலார் போன் 'பீப்' சப்தங்களோடு அவரைக் கூப்பிட்டது.

''ஹலோ... இன்ஸ்பெக்டர் முத்துராமன் ஹியர்...''

''நான் டாக்டர் பேசறேன்...''

''சொல்லுங்க டாக்டர்...''

''நீங்க உடனே ஜி.ஹெச் வர முடியுமா...?'' என்றார் டாக்டர்.

## 16

டாக்டர் பரபரப்பான முகத்தோடு இருந்தார்.

இன்ஸ்பெக்டர் முத்துராமன் அவரை ஏறிட்டுக் கேட்டார்.

''என்னை அவசரமா வரச் சொன்னதுக்குக் காரணம் என்ன டாக்டர்...?''

''திருச்சிற்றம்பலத்தின் பாடியை போஸ்ட்மார்ட்டம் பண்ணினதில் திகைப்பூட்டக் கூடிய தகவல்கள் கிடைச்சிருக்கு... அதான் உங்களை உடனே வரச் சொன்னேன்...''

''என்ன தகவல்...?''

''ஒரு நிமிஷம் அவரோட பாடியை வந்து பாருங்க.''

டாக்டர் இருக்கையை விட்டு எழுந்தார்.

அவருடன் நடந்தார் முத்துராமன்.

போஸ்ட்மார்ட்டம் அறையில் கிடத்தப்பட்டிருந்த அவரின் உடலை நெருங்கினார்கள்.



துணியை விலக்கிக் கொண்டே சொன்னார் டாக்டர்.

''கட்சிக்காரங்க பாடியை சீக்கிரம் தரச்சொல்லி ப்ரஷர் கொடுத்துட்டிருக்காங்க... அவங்ககிட்டே ஒப்படைக்கறதுக்கு முன்னால், உங்களைக் கூப்பிட்டுக் காட்டணும்ன்னு தான் போன் பண்ணினேன்...''

துணியை அவர் முழுவதுமாய் விலக்கியிருக்க -

பிரேதத்தைப் பார்த்த முத்துராமன் திகைப்பில் குளித்தார்.

''என்ன டாக்டர்... பாடி இப்படி வெளுத்துப் போயிருக்கு...?''

''நான் கூட தண்ணியில ஊறினதாலதான் இப்படி வெளுத்திருக்குமோன்னு சந்தேகப்பட்டேன்... ஆனா... இது அப்நார்மல் வெளுப்பு... போஸ்ட்மார்ட்டம் பண்ணினப்புறம்தான் தெரிஞ்சது... இவர் உடம்பில் ரத்தமே இல்லை... அத்தனை ரத்தமும் சுத்தமா உறிஞ்சப்பட்டு மரணமடைஞ்சிருக்கார்...''

''எப்படி...?''

''உடம்பு பூராவும் மைக்ராஸ்கோப்பினால் பார்க்கக் கூடிய அளவில் ஊசி போட்ட மாதிரி மெல்லிய துவாரங்கள் லட்சக்கணக்கில் தெரிஞ்சது...''

''ஊசி போட்ட மாதிரியா...?''

''ஆமா... ஒரு சதை பீசை விவரம் சொல்லி பாரன்சிக் லேபுக்கு அனுப்பினேன்... அவங்க எக்விப்மெண்ட்ஸ் வெச்சு... பரிசோதிச்சிட்டு அந்த துவாரங்கள் எல்லாம் கடிவாய்கள்ன்னு சொன்னாங்க... பற்கள் பதிஞ்ச தடயங்கள் இருக்குன்னு சொன்னாங்க?''

முத்துராமன் மேலும் திகைப்படைந்தார்.

''பற்களா...? குழப்பமா இருக்கே...?''

''பாரன்சிக்காரங்க மூலமாவே ஆளனுப்பி அவர் செத்துப்போன நீச்சல் குளத்தை சோதிச்சிருக்காங்க... விஷயம் அங்கேதான் இருந்திருக்கு...''

''புரியும்படி சொல்லுங்க டாக்டர்.''

டாக்டர் தொடர்ந்தார். ''நீச்சல் குளத்துக்குள்ளே ஊசி முனை சைஸில் நூற்றுக்கணக்கில் சின்னச்சின்ன பொடி மீன்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டிருக்கு. இந்த மீன்களுக்கு பேர் **'ஸ்பானிஷ ஃபிஷ்'**. இது ஒரு வகையான கொலைகார மீன்கள்...''

''என்ன... கொலைகார மீன்களா?''

''எஸ்...! இந்த ஸ்பானிஷ் மீன்கள், அட்டை போல் ஒட்டிகிட்டு மனித ரத்தத்தை உறிஞ்சக் கூடியவை. ஒரு நீச்சல் குளத்துல நூறு மீன்கள் இருந்தா போதும். யாராவது இறங்கினா, ரத்தவாடையை மோப்பம் பிடிச்சு ஒரே சமயத்துல எல்லா பக்கமிருந்தும் பாய்ந்து வந்து உடம்போடு ஒட்டிகிட்டு ரத்தத்தை உறிஞ்ச ஆரம்பித்துவிடும். அந்த வகையான கொலைகார மீன்களை ஸ்பானிஷ் நாட்டில் வளர்த்து, எதிரிகளை அழிக்கிறதுக்காக வெளிநாடுகளுக்கு திருட்டுத்தனமாக சப்ளை பண்ணிட்டிருக்காங்க... ஒரு மீனின் ஜீன்களை வெச்சு, நாச வேலைக்களுக்காகவே வெளிநாட்டில் உருவாக்கப்பட்ட மீன் இது. ஃபிஷரி வெரைட்டி டிபார்ட்மெண்ட்டிலிருந்து கிடைச்ச தகவல்கள் இது.''

இன்ஸ்பெக்டர் முத்துராமன் அயர்ந்து போய் அவரைப் பார்த்தார்.

''**பயாலஜிக்கல் வெப்பன்ஸ்** பற்றி கேள்விப்பட்டிருக்கேன். இப்படி



**ஜுவாலாஜிக்கல் வெப்பன்ஸ்** கூட உருவாக்கியிருக்கிறதை இன்னிக்குத்தான் தெரிஞ்சுகிட்டேன்.''

''என்னோட ஆச்சர்யமெல்லாம் அதில்லை இன்ஸ்பெக்டர்! மினிஸ்டரை அப்படி நீச்சல் குளத்துல கொடூரமா கொலை செய்யத் திட்டம் போட்ட அந்தக் கொலையாளிக்கு 'ஸ்பானிஷ்ஃபிஷ்' மீன்கள் எப்படி... யார் மூலம் கிடைச்சிருக்கும்?''

''கடத்தல்காரர்களை மடக்கினா உண்மைகள் வெளியே வரும் டாக்டர்.''

''விஷ்... யூ பெஸ்ட் ஆஃப் லக்...! சீக்கிரமே கொலையாளியைக் கண்டுபிடிக்க ஸ்டெப்ஸ் எடுத்துடுங்க...''

''இந்த வினாடியிலிருந்து அந்தப் பணிதான் ஆரம்பம்.''

முத்துராமன் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டை வாங்கிக் கொண்டு, தலைக்கு தொப்பியைக் கொடுத்தபடி எழுந்தார்.

## 17

**ரா**த்திரி பதினோரு மணி.

தாமினியின் படுக்கையறையிலிருந்த பிரைவஸி லைனின் டெலிபோன் உயிர் பெற்றுக் கூப்பிட்டது.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த தாமினி ரிஸீவரை எடுத்துக் குரல் கொடுத்தாள்.

''ஹலோ...''

''அம்மா... நான் தர்மா பேசறேன்.''

தாமினி குரல் தழுதழுத்தாள்.

''த... ர்... மா...''

"டி.வி. நியூஸ் பார்த்தீங்களாம்மா?"

"பா... பார்த்தேன்."

"அது என்னோட கைவரிசைதான்...! இனிமே அந்த காமப்பேய் மினிஸ்டராலே உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வராது."

"த...ர்...மா..."

"சொல்லுங்கம்மா."

"நீ அவசரப்பட்டிட்டியோன்னு தோணுது. மினிஸ்டரை அப்படி பழி தீர்க்காமே நல்ல விதமா எடுத்துச் சொல்லி திருத்தியிருக்கலாம்."

"அதெல்லாம் திருந்தாத ஜென்மம் அம்மா. பெண்களை போகப் பொருளா நினைச்சு, எத்தனையோ பெண்களோட வாழ்க்கையை நாசம் பண்ணியிருக்கார். இதயமே இல்லாத மனுஷன். சட்டம்ங்கிற வலையைக் கிழிச்சுட்டு துவம்சம் பண்ணிட்டிருந்த அவருக்கு இந்த தண்டனைதான் சரி! ஒருவகையில் நான் செஞ்சது நம்பிக்கை துரோகம்தான். என்னை முழுசா நம்பினார். ஆனா அவர் மேல நான் வெச்சிருந்த விசுவாசத்தைக் காட்டிலும் உங்க மேல நான் வெச்சிருந்த அபிமானம் அதிகம். நான் உங்களுக்கு ஒரு ரசிகன் மட்டுமில்லை; மானசீக சகோதரனாகவும் இருந்தேன். காரணம் எனக்கே புரியலை. ஒருவேளை போன ஜென்மத்தில் நீங்க எனக்கு ஒரு சகோதரியா இருந்திருக்கலாம்..."

"தர்மா...! இருந்தாலும்..."

"நான் மினிஸ்டரைக் கொலை பண்ணினது நியாயமில்லைன்னு சொல்ல வர்றீங்களாம்மா...! அம்மா! அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியாது. அவர் உயிரோடு இருந்தா நீங்க ஒரு விநாடி கூட நிம்மதியா இருக்க முடியாது. நீங்க நிம்மதியா இருக்கணும்ன்னா அந்த மிருகம் சாகணும்..."

"தர்மா...?"



"அம்மா...! உங்க மேல எனக்கு அபிமானம் இருந்தது. அந்த அபிமானம் பக்தியாகவும், வெறியாகவும் மாற என்ன காரணம் தெரியுமா?"

"என்ன காரணம்?"

"பொதுவா நடிகைகள்ணாலே பணத்துக்காக ஆசைப் படறவங்கன்னு சொல்வாங்க. ஆனா... நீங்க அப்படியில்லாமே வித்தியாசமா இருந்தீங்க. மினிஸ்டரோட ஆசைக்கு நீங்க இணங்கியிருந்தா அவர் உங்க காலடியில பணத்தைக் கொட்டியிருப்பார். ஆனா அவரோட அதிகார பலத்துக்கு நீங்க பணியாமே எதிர்த்து நின்னப்ப, உங்க மேல எனக்கிருந்த அபிமானம் இன்னும் அதிகமாயிடுச்சு. உங்களை இந்த மிருகத்தின் பிடியிலிருந்து, எப்படியும் காப்பாத்தணும்ன்னு முடிவு பண்ணித்தான் இந்த வேள்வியில் இறங்கினேன். அவர் கூட இருந்துகிட்டே உங்களுக்கு மறைமுகமா உதவி பண்ணினேன். என்மேல் அவருக்கு நம்பிக்கை போயிட்டா வேற ஒருத்தர் மூலமா உங்க உயிர்க்கு அவர் ஆபத்தை உண்டாக்குவாரோ என்கிற பயத்துல, உங்களைக் கொலை செய்ய வர்றமாதிரி நடிச்சேன். நீங்களும் ஒத்துழைப்பு கொடுத்தீங்க... நீங்க முழுசா ஒத்துழைப்பு கொடுத்ததினால்தான் என்னால திட்டத்தை சரிவர நிறைவேற்ற முடிந்தது..."

"போலீஸ்... உன்னைக் கண்டுபிடிச்சுட்டா...?"

"அது முடியாதம்மா... எந்த ஜென்மத்திலும் போலீஸ் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. எனக்கு '**ஸ்பானிஷ் ஃபிஷ்**' கொடுத்து உதவிய ஒரு ஸ்மக்ளர் ஃப்ரண்ட் என்னிக்குமே உண்மையை வெளியே சொல்ல மாட்டான். சட்டத்தை நான் ஏமாத்தறதா நீங்க நினைக்காதிங்கம்மா. சட்டம் இப்போ எடுப்பார் கைப்பிள்ளை மாதிரி ஆயிடுச்சும்மா. ஒரு பிரபல நடிகையா இருக்கற உங்களுக்கு அந்த சட்டம்

பயன்பட்டதா? நீங்க அவரோட தொல்லை தாங்காமே போராடிய போது உங்களைக் காப்பாத்த அந்த சட்டம் வந்ததா...? வரலையே...? மினிஸ்டர்க்கு சட்டத்தால் தண்டனை வாங்கித்தர எந்தக் காலத்திலும் முடியாது. அவர் தண்டிக்கப்படணும்ன்னா என்னை மாதிரி இருக்கிறவங்க சட்டத்தைக் கையில எடுத்துக்கறதைத் தவிர வேறு வழியில்லை..."

"தர்மா..."

"சொல்லுங்கம்மா..."

"உனக்கு எந்த நேரத்துல, எந்த உதவியை வேணும்ன்னாலும் கேளு. தயங்காமே பண்ணக் காத்திட்டிருக்கேன்..."

"எனக்கு உங்க சந்தோஷம் ஒண்ணே போதும்மா. எப்பவாவது ஒரு தடவை இந்த தர்மாவை நினைச்சுகிட்டா அதுவே நீங்க எனக்குப் பண்ற உதவி..."

மறுமுனையில் ரிசீவர் வைக்கப்பட தாமினியின் கண்களில் தர்மாவுக்காக நன்றிக் கண்ணீர் கோர்த்துக் கொண்டது.

ரிசீவரை வைத்துவிட்டு மெல்ல எழுந்து போய் ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்றான்தர்மா.

ரோடு தெரிந்தது.

சோடியம் வேப்பர் விளக்கு வெளிச்சத்தில் சாலையோர சுவர்க்கு ஏணி ஒன்றைப் போட்டு போஸ்டரை ஒட்டிக் கொண்டிருந்தான் ஒருவன்.

போஸ்டரை உற்றுப் பார்த்தான் தர்மா.

அது அவள் நடித்த படத்தின் போஸ்டர் தான்.

படத்தின் பெயர்,

**'தர்மம் தோற்றதில்லை.'**

**(முற்றும்)**



## வாசகர் கடிதம்



க்ரைம் ஸ்பெஷல் 157 'மூச்சில் வாழும் புல்லாங் குழல்கள்' நாவலின் கோ. ஃபேக்ஸ் பக்கத்தில் 'விஜய பாரதம்' மாத இதழில் வெளிவந்த கட்டுரையை நம்முடைய வாசிப்புக்குத் தந்த ஆர்.கே.வுக்கு நன்றிகள் பல. டிவி சேனல்கள் நம்முடைய நேரத்தையும், அமைதியையும், அறிவையும் எப்படியெல்லாம் 'கொலை செய்கின்றன' என்று நான் பல முறை ஆதங்கப்பட்டிருக்கிறேன். மன உளைச்சல்களுக்கு ஆளாகி யிருக்கிறேன். இப்படி என்னைப் போல் லட்சக்கணக்கானவர்கள் அவதிக்குள்ளாகி யிருக்கிறார்கள் என்பதற்கு அந்தக்கட்டுரையே சாட்சி. டிவி சேனல்கள் இந்த ஃபேக்ஸ் பகுதியைப் படித்தாவது தன்னை மாற்றிக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

**- எஸ். ராஜுவேலு, மானாமதுரை.**

சென்ற எடிட்டர் ஏரியாவில், 'ராஜேஷ்குமார் ஆயிரம் நாவல்களுக்கு மேல் எழுதினாலும் ஒவ்வொரு நாவலும் ஒவ்வொரு புதிய பார்வையில் இருக்கும்' என்று எழுதியிருந்தார் ஜீயே. அது முற்றிலும் சரியே.

**- ரா. அண்ணாமலை, சிதம்பரம்.**

'ரக்பி' விளையாட்டைப் பற்றிய ஒரு கேள்விக்கு நீண்ட விளக்கமான ஒரு கட்டுரையே எழுதிவிட்டார் விவேக். **விளக்கம் ப்ளீஸ் விவேக்** எல்லாவிதமான சந்தேகங்களுக்கும் விடை தருகிறது. எழுதுகிற ஆர்.கே.வுக்குப் பாராட்டுகள்.

**- ஜி. பார்த்தசாரதி, திருவல்லிக்கேணி.**

ஜீயே சார் சொன்னது போல, ஆர்.கே.சார் வெறும் பொழுது போக்குக்காக மட்டுமல்லாமல், சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகவே அமைந்திருந்தது க்ரைம் ஸ்பெஷல் 157 - **மூச்சில் வாழும் புல்லாங்குழல்கள்**. பாராட்டுகள்.

**- எஸ். வெங்கடேஸ்வரன், கோவை.**

**'மூச்சில் வாழும் புல்லாங்குழல்'**களின் நாயகி சினேகா வீர மிக்க புதுமைப் பெண்ணாக திகழ்கிறாள். சுற்றுச் சூழல் சீர்கேட்டை தடுக்கும் அரணாக அவள் காட்சியளிப்பது நாவலின் பெருமை: பெட்டிச் செய்திகள் அனைத்தும் மிக அருமை.

**- ஜி. மனோகரன், கச்சிராபாளையம்.**